9.67
53

உ
சிவமயம்

# ஈழநாட்டிற்
# புராண படனச் செல்வாக்கு—
## ஓர் ஆய்வு

இரா. வை. கனகரத்தினம், M. A.
விரிவுரையாளர், இந்துப் பண்பாடு,
பேராதனைப் பல்கலைக் கழகம்,
பேராதனை.

1985

உ
சிவமயம்

# ஈழத்திற் புராண படனச் செல்வாக்கு— ஓர் ஆய்வு

✶

இரா. வை. கனகரத்தினம், M. A.
விரிவுரையாளர், (இந்துப் பண்பாடு.)
பேராதனைப் பல்கலைக் கழகம்,
பேராதனை.

●

ஏழாலை — புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான
வெளியீடு.

✶

மஹாத்மா அச்சகம்,
ஏழாலை மேற்கு,
ஏழாலை.

முதலாம் பதிப்பு: வைகாசி 1985

பதிப்புரிமை: ஆக்கியோனுக்கே

இந்நூலால் வரும் வருமானங்கள் அனைத்தும்
மேற்படி தேவஸ்தானத்துக்கே உரியது.

விலை ரூபா: 15

## சமர்ப்பணம்

தமிழ்க் கல்வியின் விருத்தியின் பொருட்டும் சைவசமய மேம்பாட்டை நோக்கியும் ஈழநாடெங்கிலும் சைவத் தமிழ் ஆங்கில வித்தியாசாலைகளை நிறுவியும் பேருபகாரியாயும் சைவ அனாதைகளுக்குத் தாயும் தந்தையுமாக விளங்கியும் நாவலர் பெருமான் காட்டிய அடிச்சுவட்டிலே வாழ்ந்தும் தமக்கென எதனையுமே தேடிக்கொள்ளாது மேற்படி நோக்கங்களை அடைவதற்கே தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த பெருமகன் சைவப் பெரியார் இந்துபோட் சு. இராசரத்தினம் அவர்களுக்கு இந்நூலைச் சமர்ப்பணமாக அளிக்கின்றேன்.

# ஏழாலை - அத்தியடி புவனேஸ்வரி அம்பாள் ஆலய வரலாறும் - பதிப்புரையும்

சக்தியை முழுமுதற் பொருளாகக் கொண்டும், முழுமுதற் பொருளின் தடத்தலக்கணத்தின் ஒரு பகுதியாகிய பிரபஞ்ச ஆற்றலை வெளிப்படுத்தும் சக்தியை, சக்தியாகக் கொண்டும் வழிபடும் சமயத்தைச் சாத்தம் என்று குறிப்பிடுவது மரபு. வட இந்தியா முதல் தக்கணம் வரை இத்தகைய மரபு தனி வழிபாட்டு மரபாக வளர்ச்சி பெற்றுவந்தது. இவ்வழிபாடு காலப் போக்கில் வேத மரபுகளையும் சடங்குகளையும் பின்பற்றும் வழிபாட்டு முறையாகப் பிரிந்து தன் செல்வாக்கு இழந்த நிலையில், கி. பி. ஆறும் நூற்றுண்டு முதல் பதினைன்காம் நூற்றுண்டுவரை தமிழ் நாட்டிலே மகோன்னதமாக வளர்ச்சி அடைந்துவந்த சைவத்துடன் கலப்புற்றது. சாத்தம் தனித்துவமாக எழுபத்தேழு தந்திரங்களைக் (ஆகமங்கள்) கொண்டிருந்தபொழுதும் தமிழ் நாட்டிலே அமைந்த சக்தி பீடங்கள் யாவும் சிவாகமங்களுக்கமைந்த கிரியை நெறிகளைக் கொண்டே சடங்குகளை நடத்திவருகின்றன. அவ்வகையில் தென்னுட்டிலும் ஈழநாட்டிலும் அமைந்த சக்தி பீடங்கள் யாவும் சைவ சமயத்திற்குட்பட்டுச் சைவாகமச் சடங்குகளைப் பின்பற்றிவருவதோடு (சைவ) சமய பத்தியையும் வளர்த்துவருகின்றன. இவ்வகையிலே அமைந்த ஆலயங்களில் ஒன்றே ஏழாலை—அத்தியடி அருள்மிகு புவனேஸ்வரி அம்பாள் ஆலயமாகும்.

'புவனேஸ்வரி' என்ற நாமத்தையுடைய சக்தி பீடங்கள் தமிழ் நாட்டிலே இருப்பதாகத் தெரியவில்லை. கோயில் மாநகரம் என்று அழைக்கப்படும் புவனேஸ்வரத்தில் வீற்றிருக்கும் சக்திக்கே புவனேஸ்வரி அல்லது பராசக்தி என்ற பெயர் உண்டு. ஈழநாட்டிலும் இத்தகைய பெயரையுடைய சக்தி பீடங்கள் மிக அருமை. கீரிமலை, நாவற்குழி, இடைக்காடு, சுதுமலை ஆகிய இடங்களிலே அமைந்த சிறு ஆலயங்களும், சத்திரங்களும் இத்தகைய பெயரைப் பெற்றுள்ளன.

புவனேஸ்வரி பரத்துவமுடைய ஆற்றல் படைத்தவள். அவளைத் தேவி மஹாத்மியம் முதலான நூல்கள் சிறப்பித்துப் பேசும். மஹா விஷ்ணுவான திருமால் புவனேஸ்வரியைப் பின்வருமாறு போற்றுதல் செய்வது அவளின் பரத்துவத்தை வெளிப்படுத்தும்.

''தேவி உனக்கு நமஸ்காரம். மூலப் பிரகிருதியாகிய உனக்கு நமஸ்காரம். சிருஷ்டி கர்த்திரியாகிய உனக்கு நமஸ்காரம். விரும்பியவைகள் அனைத்தையும் தருகின்றவளாகிய உனக்கு நமஸ்காரம். அறிவு விருத்தி பேணியாயிருக்கின்ற உனக்கு நமஸ்காரம். சம்சார சாகரத்திற்குத் தோணியாயிருக்கின்ற உனக்கு நமஸ்காரம். பஞ்ச கிருத்தியங்களையும் நடத்துகின்றவளாகிய உனக்கு நமஸ்காரம். புவனேஸ்வரியாகிய உனக்கு நமஸ்காரம். அனைத்துக்கும் தலைமை வகிப்பவளாகிய உனக்கு நமஸ்காரம்''

இத்தகைய பரத்துவமுடைய சக்தியாகிய புவனேஸ்வரி அம்மை ஈழநாட்டிலே கழனிகள் நிறைந்து சோலைகள் சூழ்ந்த ஏழாலையிலே அத்தியடியைத் தனது உறைவிடமாகக் கொண்டு அருள் பாலித்து வருகின்றுள்.

19ஆம் நூற்றுண்டின் ஆரம்பத்திலே முத்தர் என்பார் தன் வயல் நிலங்களை உழுது செல்லும்பொழுது அவரது ஏரிலே சிவ விக்கிரகம் அகப்பட்டது. அவ்விக்கிரகம் சக்தியின் தோற்றமாக அமைந்தபடியால் அக்காலத்திலே யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களால் போற்றப்பட்டுவந்த கண்ணகையின் பெயரிலே இவ்வாலயத்தை ஆரம்பத்திலே ஸ்தாபித்தனர். சிவப்பிரகாசம் அவர்களின் காலகட்டத்தில் இவ்வாலயம் ஆகம முறைக்கமைந்த ஆலயமாக மாற்றியமைக்கப்பட்டபொழுது இங்கு வீற்றிருக்கும்

சக்திக்குப் 'புவனேஸ்வரி' என்னும் நாமத்தைச் சூட்டிப் புவனேஸ்வரி அம்பாள் பீடமாக மாற்றியமைத்தனர். திரு. மு. சிற்றம்பலம் (உபாத்தியாயர்), ஓவசியர் சிவசம்பு முதலானோர்கள் காலத்தில் (1932—1964) இவ்வாலயம் ஆகம, சிற்ப சாத்திர விதிக்கமைந்த ஆலயமாகப் பெரிதும் மாற்றமடைந்து வளர்ச்சிபெறத் தொடங்கியது.

1964 ஆம் ஆண்டுமுதல் இன்றுவரை இவ்வாலயத்தின் தர்மகர்த்தாவாக விளங்குபவர் ஓவசியர் சி. இரத்தினம் அவர்களாவர். இவராலே முதன் முதல் சிறப்பாக இவ்வாலயத்திற்கு மகா கும்பாபிஷேகம் (1975 ஆ வைகாசி மீ) செய்யப்பெற்றது. இவரது அயரா உழைப்பும், ஆலய சுற்றத்தாரின் உதவியும், பொதுமக்களின் ஆர்வமும் காரணமாக இவ்வாலயம் முழுமையான ஆகம நெறிக்கமைந்த ஆலயமாக மிகத் துரிதமாக வளர்ந்துவருவது குறிப்பிடத் தக்கதாகும்.

முன்பு ஒரு சமயம், ஆலய நவராத்திரி விழாவின்பொழுது அம்பாளை அலங்கரித்திருந்த பல்லாயிரக் கணக்கான பெறுமதி மிக்க நகைகள் திடீரென மாயமாக மறைந்துவிட்டன. ஆலயத்தில் இருந்த யாவரும் மனம் சோர்வுற்றுக் கலங்கி நிற்கையில், அம்பாள்மீது மிகுந்த பத்தி வைராக்கியம் கொண்ட தேவஸ்தானபதி அம்பாளை நோக்கி "நீ இங்கிருப்பது உண்மையென்றால் உனது பொருளை ஒரு கிழமைக்குள் எனக்குக் காட்டித் தந்திட வேண்டு"மென்று அம்பாளிடம் முறையிட்டுவிட்டுச் சென்றார். சரியாக ஒரு வாரம் முடிவதற்குள் அம்பாளின் திருவருளால் அவளின் உடைமைகள் அவரை வந்தடைந்தன. இதுபோன்று பல்வகை அற்புதங்களையும் வெளிக்காட்டி மெய்யடியார்களைத் தன்பால் ஈர்த்து அருள்பாலித்து வருகின்றாள்.

தைப்பொங்கல், மாசி மகம், பங்குனித் திங்கள் குளிர்த்தி, சித்திரை வருடப் பொங்கல், வைகாசி விசாகப் பொங்கல், ஆவணிச் சதுர்த்தி, ஐப்பசி—தீபாவளி ஆகிய விசேட தினங்களில் ஆலயத்தில் சிறப்பான அபிடேக பூசைகள் நடைபெறும். புரட்டாதியில் நவராத்திரி விழாவும் மார்கழியில்—திருவெம்பாவையும் மிகவும் சிறப்பாக நடத்தப்படுகின்றன. இவ்வாலயத்தில், ஆவணி—கிருஷ்ண ஜெயந்தி தினத்தில் உறியடித் திருவிழா மிகவும் கோலாகலமாக நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

இவ்வாலயத்தின் மகோற்சவ விழா ஆடி மாதத்தில் ஆடிப் பூரத்தைத் தீர்த்தமாகக்கொண்டு பதினொரு தினங்கள் நடைபெறும். 1932ஆம் ஆண்டிற்கு முன்பு இவ்வாலயத்தில் சிறப்பாகப் புராண படிப்பு நடைபெற்று வந்ததும் குறிப்பிடத்தக்க தொன்றாகும். ஈழநாட்டில் சிறந்து விளங்கும் புவனேஸ்வரி அம்பாள் ஆலயங்களில் ஒன்றாக ஏழாலை அத்தியடி 'புவனேஸ்வரி அம்மன்' ஆலயம் விளங்குகின்றது.

இத்தகைய பெருமை வாய்ந்த ஆலயம் தம் ஆலயப்பணிகளுடன் பொதுப்பணி செய்யவும் திருவருள் கூடியுள்ளது. அவ்வகையில் திரு. இரா. வை. கனகரத்தினம் எழுதிய அரிய ஆராய்ச்சி நூலான 'ஈழநாட்டிற் புராண படன வளர்ச்சி – ஓர் ஆய்வு' என்னும் நூலைத் தேவஸ்தானத்தின் முதல் வெளியீடாக வெளியிடுவதற்கு அம்பாளின் திருவருள் கூடியுள்ளதை எண்ணிப் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். இந்நூலுக்குச் சிறப்புரை வழங்கிய சைவப் பெரியோர்களான பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கும், திரு. மு. ஞானப்பிரகாசம் அவர்களுக்கும், பண்டிதர் மு. கந்தையா அவர்களுக்கும் எமது தேவஸ்தானம் நன்றி பாராட்டிக் கொள்கின்றது.

இந்நூலாசிரியர் இரா. வை. கனகரத்தினம் அவர்களுக்கு அம்பிகையின் பரிபூரண திருவருள் கிடைப்பதாகுக. அம்பாளின் திருவருட் பெருக்கால் அவர் பணி மேலும் வளர்ந்தோங்குவதாக.

ஏழாலை – அத்தியடி புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்
ஏழாலை.

சிவஞான முனிவர் எனும் மகரிஷி, பண்டிதமணி

# சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

## ஆசியுரை

"புராணங்களை நியமமாக விதிப்படி படித்தலும்
அவைகளுக்குப் பொருள் சொல்லலும், கேட்டலும்
சிறந்த புண்ணியங்களாம்.
எல்லாருங் கேட்டு உய்யும் பொருட்டுத்
திருக்கோயில்களிலே
யோக்கியர்களைக் கொண்டு
புராணங்களை வாசித்துப் பொருள் சொல்லுதல்
மிகமேலாகிய புண்ணியம்"
இவை நாவலர் பெருமானது வாக்குகள்.

x x x x

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர்
திரு. இரா. வை. கனகரத்தினம் அவர்கள்,
ஆலயந்தோறும் நடைபெற்று வந்த - நடைபெறுகின்ற
புராணப் படிப்பு உள்ளிட்ட படிப்புக்களைப் பற்றி
விரிவானதொரு ஆராய்ச்சி செய்திருக்கின்றார்.
ஆராய்ச்சி பெரிதும் பயனுடையதாயிருக்கும்.

x x x x

குறித்த ஆராய்ச்சிக் கட்டுரையை எழுதியுள்ள ஆசிரியர் அவர்கள்
புராண படனங்களில் கையாளப்பட்டுவரும்
பழைய புதிய நடைமுறைகளை,
சம்பந்தப்பட்ட நூல்கள் பலவற்றில் இருந்தும்
ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டி
அகராதி முறையில் விளக்கி இருப்பது
மிகவும் பாராட்டக்கூடியது.
ஈழநாட்டிற் புராண படனச் செல்வாக்கு
எவ்வாறு வளர்ந்து வந்தது
என்பது பற்றி ஆய்வு நடத்துவோர்க்கு
இவ்வாராய்ச்சிக் கட்டுரைகள்
நல்லதொரு திறவு கோலாயமையலாம்.

x x x x

ஆராய்ச்சியை உபகரித்ததன் பொருட்டு
ஆசிரியருக்கு
மிக்க நன்றி தெரிவிப்போமாக.

*கலாசாலை வீதி,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*

*இலக்கிய கலாநிதி*
**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை**

சைவப் பெரியார், சித்தாந்த வித்தகர்

## திரு. மு. ஞானப்பிரகாசம், B. A., B. Sc. அவர்கள்

# முன்னுரை

உலகில் வழங்கும் உயர்ந்த பழம் கருத்துக்கள் மனிதன் நினைவை விட்டு அகல்வதில்லை. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் திருவாசகம், கந்த புராணம், பெரியபுராணம் ஆகிய இந்நூல்களின் ஆழமான கருத்துக்களை வைத்தே, நாங்கள் சமயத்தைப் பேணிவருகின்றோம்.

யாழ்ப்பாணம் ஒரு மிகப் புராதனமான புண்யபூமி. நிலப்பரப்பு, சனத்தொகை ஆகிய இவற்றால்கூட மட்டுப்படுத்தப்பட்டுக் கிடப்பது. மேல் கீழ் இல்லாத ஒரு சமதரை நிலம் எனவும் கூறலாம். வடக்கே தென்னிந்தியாவிலும், தெற்கே தென்னிலங்கையிலும் உள்ள மேடுகள், பள்ளங்கள் இந்த யாழ்ப்பாண தேசத்தில் இல்லை. யாழ்ப்பாண சரித்திரத்தை எழுத முயன்றவர்கள் 14 ஆம், 15 ஆம் நூற்றாண்டுகள் தொடக்கமே அதன் சரித்திரத்தை எழுதி, வைத்துள்ளனர். அவர்கள் குறித்த நூற்றாண்டுகளில் ஆரியச் சக்கரவர்த்திகள் யாழ்ப்பாணத்தை ஆட்சி புரிந்தனர் என்பர். பின்னர் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்ற மேனாட்டுச் சாதியினர் இந்த யாழ்ப்பாணத்தை ஆட்சி புரிந்தனர் என்பது நாம் அறிந்ததே. அன்னோரது படையெடுப்பு, ஆட்சிப்போக்கு முதலியவற்றால் சமூகத்தின் மேல் மட்டத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பது நாம் அறிந்ததே. அம்மாற்றங்களால் இன்றைய யாழ்ப்பாண பூமியில் என்றுமில்லாத முறையில் ஓர் அரசியல் புரட்சி நிகழ்ந்துகொண்டிருப்பதையும், யாழ்ப்பாணம் தனது பண்டைய இயற்கை நிலையை நாடிக்கொண்டிருப்பதையும் நாங்கள் எங்கள் கண்முன் கண்டுகொண்டே வாழுகின்றோம். ஆயினும் யாழ்ப்பாணம் தனது பூகோள, சரித்திர அமைப்புகளினாற்போலும், ஒரு தனித்துவமான இயற்கை வளர்ச்சியையும் உடையதாயுள்ளது. அந்த வளர்ச்சி ஆழமும் அகலமும் பெற்றிருக்கிறது.

மிகப் பழைமைவாய்ந்ததும் கமத்தொழில், கைத்தொழில், கடற்றொழில், வாணிபத்தொழில் ஆகிய இவற்றோடு பின்னிப் பிணைந்ததும் ஆகிய ஒரு ஆன்மீக ஒழுகலாறு நெறி யாழ்ப்பாணத்தில் உளது. இயற்கைக்கும் அஞ்சி, இறைவனுக்கும் அஞ்சி, பயபக்தி நிறைந்த உள்ளத்தோடு, நடுவுநிலைமை திறம்பாது, வாழவேண்டும் என்ற ஆத்மீகச் சொத்தும் ஆத்மீக வேட்கையும் யாழ்ப்பாணத்துப் பொதுமக்களிடத்தில் உள்ளன. யாழ்ப்பாணப் பொதுமக்கள் வாழ்க! அவர்கள் பற்றி நிற்கும் சாதாரணத்வப் பெருநெறி வாழ்க!! இந்தப் பொதுசன ஆத்மீக வேட்கையை உணர்ந்து வாழ்பவர்களே உண்மைச் சைவர்களாவார். உணர்ந்து அதனை நிலைநிறுத்த முயல்பவர்களே உண்மைச் சைவத் தலைவர்களாவார். சாதாரணத்வ வாழ்வைக் கடைப்பிடித்து வாழுதல், உயர்ந்த ஒழுக்க நெறியைப் பேணுதல், பெரியோரைக் கனம் பண்ணுதல், தெய்வக் கொள்கையில் சிறந்திருத்தல் ஆகிய இவை அனைத்தையும் ஒருமைக் காட்சியாகக் கண்டு கதை வடிவங்களில்

ஏனையோர்க்கும் உணர்த்த முயன்றவர்களே புராண ஆசிரியர்களாவர். இவ்வகையில், கச்சியப்பர், சேக்கிழார், கடவுண்மா முனிவர் முதலியோர் ஏனைய சமயாசாரியார்களிலும் பார்க்க ஒருபடி மேலானவர் என்றே கூற வேண்டும். மேற்கூறிய புராண ஆசிரியர்கள் வழிவந்த கந்தபுராணம், பெரியபுராணம், திருவாதவூரடிகள்புராணம் என்ற நூல்கள் வழங்கிய உயர்ந்த கருத்துக்கள் யாழ்ப்பாண மண்ணோடு கலந்து யாழ்ப்பாணத்துக்கே ஒரு பௌராணிக கலாசாரத்தை உருவாக்கித் தந்துள்ளன.

இக்கலாசாரத்தின் வரலாற்றை இன்றைய சரித்திர சூழலிலே நாம் உணரவேண்டியது மிகமிக இன்றியமையாததாகும். நண்பர் கனகரத்தினம் அவர்கள் ''ஈழத்திற் புராண படனச் செல்வாக்கு - ஓர் ஆய்வு'' என்ற ஒரு ஆய்வு நூலே எமக்கு வழங்கியுள்ளார். ஆய்வுநூலாசிரியர் அவர்கள் தற்போது பேராதனைப் பல்கலைக்கழக இந்துப் பண்பாட்டு விரிவுரையாளராக இருந்து வருகிறார். இத்துறையில் முதுகலைமாணிப் பட்டதாரிகள் இயல்பாகவே சைவப்பணியும் தமிழ்ப்பணியும் மேலான பணிகள் என்னும் ஆர்வத்தில் தழைப்பவர்கள். இந்நூல் இக்கால அறிவியல் ஆராய்ச்சி செய்வோரின் அடிச்சுவட்டைப் பின்பற்றியதொன்றுயினும் புராணங்களின் பெருமையையும் புனிதத் தன்மையையும் ஆங்காங்கே பிறர்மொழி வாயிலாக ஆசிரியர் தொட்டுக்காட்டுகின்ற முறை இன்புறத் தக்கது. இந்த ஆய்வுநூல் காலத்தால் புதியதாயினும் கச்சியப்பர் போன்ற புராண ஆசிரியர்களையும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் போன்ற புராண படன நெறித் தலைவர்களையும் காலத்துக்குக்காலம் இந்த யாழ்ப்பாணத்தில் புராண படன நெறி தழைத்தோங்கும்வண்ணம் தோன்றிய சான்றோரையும் இந்நூல்வாயிலாக ஆசிரியர் அவர்கள் வாழவைக்கின்றார்.

நண்பர் கனகரத்தினம் அவர்கள் புராண நூல்கள் சம்பந்தமான ஆய்வு நூல்கள் பல இயற்றி, யாழ்ப்பாணத்துக்கு மிக இன்றியமையாத தமிழ்ப்பணியிலும் சைவப்பணியிலும் சிறக்கவேண்டும் என்பது எமது பிரார்த்தனை.

வாழ்க பௌராணிக நூல்கள்!
வாழ்க புராண படன நெறி!
வாழ்க புராண ஆய்வு நூல் ஆசிரியர்!

ஏழாலை மேற்கு,
சுன்னுகம்.

மு. ஞானப்பிரகாசம்

ஞானபண்டிதர் ஏழாலை மு. கந்தையா, B. A. அவர்கள்

## சிறப்புப் பாயிரம்

### 'இன்னுந் தருகுவன்'

மெய்வகை வேத சிவாகம நெறிப்படு
சைவமுந் தமிழுந் தலைநிமிர்ந் தொளிர்தலின்
உய்வகை நாடுநர் உயர்நலன் விளைவோர்
எவ்வகை யோரையும் ஈர்த்தவர்க் கிதமருள்
தென்னக ஈழச் செழுநிலப் பரப்பினில்
நன்னிலை பெற்றுளிர் நாமப் பெரும்புகழ்ச்
சைவநன் மாது தன்னுறு மகார்கொளத்
தெய்விக ஞானச் செழும்பா லமுதம்
பவ்விய மாகப் பரிந்திருந் தூட்டும்
ஐதமர் முலையெனும் அருமைசால் புராணச்
செவ்விய படனச் சீர்முறை தெரிந்து
இகலில் காட்சி இனிதமர் நிறையொடும்
அகிலஈ ழத்தினு மதன்நிலை ஆய்ந்தே
தென்னக நிலையொடும் ஈழ நிலைக்குள்
மன்னியல் ஒற்றுமை வேற்றுமை காண்வர
ஈழப் புராண படன நெறியதே
தாழ்வில் சைவநற் சமுதா யத்தின்
வாழ்நிலை யாவது வகைபெறக் காட்டினன்
செந்தமிழ்க் கன்பன் சீர்திகழ் கலையாம்
இந்துநா கரிகத் தியன்முறை தேர்ந்தோன்
முந்து மத்துறை முதுகலை மாணி
பார்புக ழிந்துப் பழம்பண் பாட்டியல்
ஊரூர் தொறுநுழைந் துசாவிடு முழைப்பினன்
ஏரார் கலைவளப் பேரா தனைநிகழ்
பல்கலைக் கழகத் தொல்காப் பெரும்புகழ்
ஆசான் அன்பறி வாசா ரந்திகழ்
தேசார் நேசன் திகழ்தமிழ்ச் சால்புறு
கண்ணிய புருஷன் கனகரத் தினமே
அன்னோன் தன்னறி வாய்வுத் திறனால்
பாவலர் சைவ காவலர் பலர்புகழ்
நாவலர் சமய சமூக பணித்திற
ஆய்வு நூலொன் றுர்வலர் புகழ்தர
முன்னுந் தந்தவன் முன்னுமற் றிதுபோல்
இன்னுந் தருகுவன் மன்னிய
சைவநற் பழைமை புதுமையா மாறே.

ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

பண்டிதர் மு. கந்தையா B. A.

# நன்றியுரை

நான், ''ஆறுமுகநாவலர் சைவசமயத்திற்கு ஆற்றிய பணிகள்'' என்னும் விடயத்தில் முதுகலைமாணிப் பட்டத்திற்கு ஆய்வு நடத்தியபொழுது ''நாவலரின் பிரசார நோக்கு''ப்பற்றி ஆழமாக ஆராய்ந்தேன். நாவலரவர்கள் தனது பிரசார சாதனங்களுளொன்ருக மரபுவழிச் சைவப் பிரசார சாதனங்களுளொன்ருன புராண படன நெறியினை நன்கு பயன்படுத்தி வெற்றி கண்டாரென்பதை ஆய்வுமூலமாக அறிந்துகொள்ள முடிந்தது. இதனை அடிப்படையாகக் கொண்டு, ஈழநாட்டிலே தனித்துவமாகப் போற்றப்பட்டுவரும் புராண படன நெறியினைத் தனியாக ஆராய்தல் வேண்டுமென்று ஓர் எண்ணம் பிறந்தது. அவ்வெண்ணம் 1982 ஆம் ஆண்டு நடைபெற்ற உலக இந்து மகாநாட்டின்போது அருக்கூட்டியபொழுதும் 1985 ஆம் ஆண்டிலே அது முழுமையான வடிவத்தைப் பெற்றது. துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியவர்களின் மணிவிழாச் சபை வெளியிட்ட ''சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள்'' என்னும் தொகுதியில் ''ஈழத்தில் புராண படனச் செல்வாக்கு - ஓர் ஆய்வு'' என்னும் கலைப்பில் புராண படனம் பற்றிய ஆய்வு இடம்பெற்றுள்ளது. இவ்வாய்வு தனி நூலாக வெளிவரவேண்டுமென்று சைவர்களும் சைவ நிறுவனங்களும் கேட்டுக்கொண்டதன்பேரிலே, ஏழாலை, புவனேஸ்வரி தேவஸ்தான வெளியீடாக இவ்வாய்வுக் கட்டுரை நூல்வடிவம் பெற்று வெளிவருகின்றது.

எனது ஆய்வின்பொழுது விளக்கமளித்த பண்டிதர்கள் ஏழாலை மு. கந்தையா, சச்சிதானந்தம், கொக்குவில் செ. சிவப்பிரகாசம் ஆகியோருக்கும் மற்றும் சைவப் பெரியார் மு. ஞானப்பிரகாசம், வித்துவான் க. கணபதிப்பிள்ளை, க. உமாமகேஸ்வரன் முதலானோர்க்கும் எனது அன்பு நிறைந்த நன்றிகள். எனது ஆய்வினை முதலில் வெளியிட்ட துர்க்கா துரந்தரியின் மணிவிழாச் சபையினருக்கும் முதற்கண் எனது நன்றி.

இந்நூலுக்கு ஆசியுரை வழங்கிய சிவஞான முனிவர் சி. கணபதிப்பிள்ளை என்னும் மகரிஷிக்கும், முன்னுரை வழங்கிய சித்தாந்த வித்தகர் மு. ஞானப்பிரகாசம் B. A., B. sc. அவர்களுக்கும், சிறப்புப் பாயிரம் வழங்கிய ஞான பண்டிதர் மு. கந்தையா B. A. அவர்களுக்கும் எனது மனமுவந்த நன்றிகள். இவ்வாய்வினை நூல் வடிவமாக வெளியிட முன்வந்த தேவஸ்தான பதி சி. இரத்தினம் அவர்களுக்கும் எனது நன்றி. எனது பணிகளுக்கெல்லாம் உடனிருந்து ஒத்துழைப்பு நல்கும் எனது மனைவி திருமதி. க. மீனலோசனிக்கு நன்றி கூறுதுவிடல் அடாத செயலன்றோ! அன்னருக்கும் எனது நன்றி.

ஆய்வுகள் எவையும் முடிந்த முடிவாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு. அதனல், எனது சிற்றறிவுக்கு எட்டிய மட்டில் யான் படைத்த இந்நூலுக்கு வாசகர், ஆய்வாளர் முதலானோரிடமிருந்து தக்க விமர்சனத்தை எதிர்பார்க்கின்றேன்.

''பிருந்தாவனம்'',
ஏழாலை மேற்கு,
ஏழாலை.

இரா. வை. கனகரத்தினம்

# ஈழநாட்டிற் புராண படனச் செல்வாக்கு-
## ஓர் ஆய்வு

புராணம் என்பதற்குப் பழைமை என்பது பொருள். புராணங்கள் வடமொழியில் வேதம், இதிகாசம் என்பவற்றுக்கு அடுத்து வைத்து எண்ணப்படுவனவாகும்.[1] முன்னையது ஒரு சாராருக்கே உரிமையுடையதாக இருந்தது. பின்னையவற்றினைப் பொதுமக்கள் படித்து வந்தனர். கிராமங்களிற் புராணங்களுக்குப் பொருள் கூறப்பட்டு வந்தது. பொதுமக்கள் அவற்றைக் கேட்டு ஒழுக்கமுங் கல்வியறிவும் பெற்று வந்தனர். இதிகாசங்களும் புராணங்களும் மக்களுடைய பொதுப் பண்பாட்டிற்குப் பெரிதும் துணை செய்து வந்தன.[2] இவை சங்கத மொழியில் எழுதப்பட்டு, கி. பி. 5 ஆம் நூற்றுண்டுக்குப் பின்னர் வடஇந்தியாவிலே செல்வாக்குப் பெற்று வந்தன. இந்நூற் கருத்துக்கள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுப் பின்னர்ப் படிப்படியாகத் தமிழ் நாட்டிலே செல்வாக்குப் பெறத் தொடங்கின.

வடஇந்தியாவிலே ஏற்பட்ட பௌத்த, ஜைன மதங்களின் எழுச்சியும், பிராமணியத்துக்கு எதிராக ஏற்பட்ட சமய, சமூக சிந்தனை மாற்றங்களும், அந்நியப் படையெடுப்புக்களும் பிராமணர்களைத் தென்நாடு நோக்கி விரட்டின. இவர்கள் தமது நூற்கல்வியோடு, சமய நூல்களையுங் கொண்டு தென்நாட்டிற்கு ஏகினர். தென்நாட்டுச் சோழமன்னர்கள் தமது அரசினையும், மேலாண்மையினையும் நிலைநிறுத்தும்பொருட்டுப் பிராமணர்களின் வருகையை வரவேற்றனர். இவர்களுக்கு அரண்மனை வாழ்க்கையிலும் அரசியல் வாழ்விலும் முதன்மை வழங்கினர். பிராமணர்களுட் சிலர் மன்னனின் ஆசான்களாகவும், ஆலோசகராகவும் அமர்த்தப்பட்டனர். சிலர் வைத்தியர்களாகவும், ஆலய சிவாசாரியர்களாகவும் நியமிக்கப்பட்டனர். இவர்கள் ஆலயங்களிலும் பிற இடங்களிலும் வேதங்களோடு புராண இதிகாச நூல்களையுங் கற்பித்து வந்தனர். இவர்களின் செல்வாக்கால் தமிழ் நாட்டிலே புராண இதிகாச இலக்கியக்கல்வி, சங்கத மொழிமூலம் வளரத் தொடங்கிற்று. இம்மொழி மடங்களிலும் பள்ளிகளிலும் போதிக்கப்பட்டது. புதிய இலக்கிய வடிவங்கள் தமிழகத்திலே அறிமுகப்படுத்தப்பட்டன. இவை சமய பாரம்பரியத்தோடு, சமுதாய நீதிகளையும் விளக்கும்

---

1. கலைக்களஞ்சியம், தொகுதி – 7, சென்னை தமிழ் வளர்ச்சிக் கழகம் (1960), பக். 431.
2. மேலது நூல், பக். 436.

நூல்களாக அமைந்திருந்தமையால் சிவதர்மம், திருஞானம், சோம சித்தாந்தம் என்னும் நூல்களுடன் இவையும்[3] கோயில்கள், மடங்கள், பள்ளிகள் முதலான இடங்களிலே படித்துப் பொருள் விரிக்கப்பட்டன.[4]

சங்கத மொழியில் அமைந்த இப்புராண இதிகாச இலக்கியங்கள் எக்காலப் பகுதியில் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன என்பதுபற்றி இலக்கிய வரலாற்று ஆசிரியர்களிடையே மிகுந்த கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆனல், சோழப் பெருமன்னர் ஆட்சிக்காலத்திலே தமிழிற் புராண இலக்கியங்கள் ஆலயங்களிலே படிக்கப்பட்டு விளக்கப் பட்டன என்பதற்கு இரண்டாம் இராசாதிராசனின் (1166-1182) 9ஆம் ஆட்சியாண்டிற் பங்குனி உத்தரத்து ஆருந்திருநாளிற் படம்பக்க நாயக்க தேவர் திருமகிழின் கீழ்த் திருவோலக்கஞ் செய்து எழுந்தருளியிருந்தபோது ஆளுடைநம்பி புராணம் படிக்கப்பட்டது. இதனை இரண்டாம் இராசாதிராசன் கேட்டான் என்று திருவொற்றியூர்க் கல்வெட்டுக் கூறுகின்றது.[5] இங்கு வாசிக்கப்பட்ட புராணம் சேக்கிழார் இயற்றிய பெரியபுராணமே யாகும் என்பர்.[6] முதலாங் குலோத்துங்கன் காலத்திலும் நீடூர்க் கோயிலிற் புராண நூல் விரிக்கும் ''புரசை மாளிகை'' ஒன்று கட்டப்பட்டதாக அறிய முடிகின்றது.[7] விஜயநகர மன்னர் காலத்தில் இம்முறை விரிவுபடுத்தப்பட்டது. பொதுவாக இந்தியா முழுதும் பொதுமக்களின் அறிவுப்பயன் கருதியோ அவர்களின் ஒழுகலாறுபற்றிய நன்மை கருதியோ புராண இதிகாசங்கள் விரித்துரைக்கப்படுவது பொது வழமையாக அமைந்திருந்ததுபோலும்.

ஈழநாட்டைப் பொறுத்தவரை பல நூற்றூண்டுகளாகப் புராண படனஞ் செய்யும் முறை கோயில்களிலும் வீடுகளிலும் மடங்களிலும் நடைபெற்று வருகின்றது. இம்முறை தமிழ் நாட்டினின்றும் இங்கு வந்ததா அன்றி இந்நாட்டிற்கே தனித்துவமுடையதா என்பதுபற்றி இன்னும் பூரணமான ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை. கிறிஸ்து சகாப்தங்களுக்கு முன்பும் பின்பும் ஈழநாட்டிற்குந் தமிழ்நாட்டிற்குமிடையே வர்த்தக நல்லெண்ணத் தொடர்புகளும் அரசியல் தொடர்புகளும் இருந்து வந்தன. கிறிஸ்து சகாப்தங்களுக்குப் பின்னர் இவ்விரு நாடுகளுக்கான தொடர்புகள், குடியேற்றங்கள், ஆட்சியுரிமை, திருமண உறவு எனப் பரந்துபட்டனவாய் அமைவதாயின. சோழப் பெருமன்னர் ஆட்சிக் காலத்தில் ஈழநாடு மும்முடிச் சோழமண்டலம் என்ற பெயரைப் பெறுவதாயிற்று. சோழ மன்னர்கள் ஈழநாட்டிற் சுமார் எழுபத்தைந்து (993-1070) ஆண்டுகள்

---

3. இராசமாணிக்கனர், மா., சைவசமயம், காரைக்குடி. செல்வி பதிப்பகம். பதிப்பு (1972),
4. ,, பெரியபுராண ஆராய்ச்சி, சென்னை, பழனியப்பா பிறதர்ஸ், 2ஆம் பதிப்பு (1960), பக். 142.
5. ,, சைவசமய வளர்ச்சி, சென்னை, பாரி நிலையம், 2ஆம் பதிப்பு, (1972) பக். 20.
6. ,, மேலது நூல், பக். 202.
7. ,, பெரியபுராண ஆராய்ச்சி (1960) பக். 142.

ஆட்சி செலுத்தினர். இவர்களின் பிற்பாடு பாண்டிய மன்னர்களும் ஈழ நாட்டின் அரசுரிமையில் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். தென்னாட்டு மன்னர்களின் ஆட்சியின் செல்வாக்கால் சைவசமய பாரம்பரியம் ஈழநாட்டிலே வேரூன்றத் தொடங்கியது. பொலநறுவை, குருநாகல், அநுராதபுரம், பதவியா, கந்தளாய், திருக்கோணமலை, மாதோட்டம், திருக்கேதீச்சரம் முதலான இடங்கள் சைவபாரம்பரியத்தின் மைற்கற்களாக விளங்கின. இவற்றின் கேந்திர நிலையமாகப் பொலநறுவை விளங்கிற்று. இங்கு 40 க்கு மேற்பட்ட சைவஆலயங்களின் அழிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 2 ஆம் சிவதேவாலயம், 5 ஆம் சிவதேவாலயம், 6 ஆம் சிவதேவாலயம் என்பன நன்கு பேணப்பட்ட நிலையிற் காணப்படுகின்றன. 10 ஆம் 11 ஆம் நூற்றுண்டுகளின் சைவ பாரம்பரியத்தின் கலைக்கோயிலாக 2 ஆம் சிவதேவாலயமாகிய வானவன்மாதேவிஈஸ்வரம் விளங்கிற்று. மன்னர்கள் இவ்வாலயத்தின் நிர்வாகத்தின்பொருட்டுப் பல மானியங்களை அளித்தனர். இங்கு ஓதுவார்கள், தேவரடியார்கள், சிவப்பிராமணர்கள், பட்டர், பதிபாத பட்டுடைப் பஞ்சாசாரியர் முதலானோர்கள் நியமிக்கப்பட்டனர். ஓதுவார்கள்மூலம், திருமுறைகளும், திருமுறைப் படிப்பின் செல்வாக்கும் ஈழநாட்டை வந்து அடைவதாயின. பொலநறுவை தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நகரத்தார், வீரவலஞ்சியர், வீரக்கொடியார், நானுதேசிகர், மணிக்கிரமத்தார், திசையாயிரத்தைந்நூற்றுவர் முதலான வணிக கணங்களால் சைவசமயச் சால்புகள் வலுப்பெற்றன. ஈழநாட்டை ஆண்ட பாண்டியர் ஆட்சியின் (1251 - 1281) பின் பாண்டியரின் சேனைத்தளபதிகளான "ஆரியச்சக்கரவர்த்தி" என்ற விருதினைப் பெற்றிருந்தோர், ஈழநாட்டின் வட பகுதியினைக் கைப்பற்றி யாழ்ப்பாண இராச்சியம் ஒன்றினை உருவாக்கி ஆட்சி புரிந்தனர். இவர்களின் ஆட்சி பதினேழாம் நூற்றுண்டின் முதற்காற் பகுதிவரை நிலைபெற்றிருந்தது. இத்தகையதோர் அரசியற் பின்னணியில், வடமொழிச் செல்வாக்கினையும், வடமொழி அறிவினையும், பிராமணர்களின் செல்வாக்கையும் பெற்றிராத ஈழநாட்டு மக்கள் சமய மேம்பாடும் ஆன்மீக பயனுங் கருதி மன்னர்களின் அனுசரணையுடன் புராண படன முறையினை ஈழநாட்டிலே ஆரம்பித்தனர் எனலாம்.

ஈழநாட்டிலே காணப்படும் புராண படன முறையினை மூன்று வகையாக வகுத்து நோக்கலாம். அவை (I) புராணங்களைப் படித்துப் பயன் சொல்லல் (II) இதிகாசங்களைப் படித்துப் பயன் சொல்லல் (III) சமயக் கதை வாசித்தல் என்பனவாகும். (I) புராணங்களுக்குப் பயன் சொல்லல் என்பது கந்தபுராணம், பெரியபுராணம் (திருத்தொண்டர் புராணம்), திருவாதவூரர் புராணம், திருவிளையாடற் புராணம், திருச்செந்தூர்ப் புராணம், சிவராத்திரிப் புராணம் முதலான புராணங்களைப் படித்துப் பயன் சொல்லுவதாகும். (II) இதிகாசங்களைப் படித்துப் பயன் சொல்லல் என்பது கம்பராமாயணம், வில்லிபுத்தூரர் பாரதம், சீவகசிந்தாமணி ஆகிய காப்பிய நூல்களுக்குப் படித்துப் பயன் சொல்வதாகும். (III) சமயக் கதை வாசித்தல் என்பது சித்திரபுத்திரனர் கதை, காஞ்சனை அம்மானை, கண்ணகி காதை, பிள்ளையார் கதை முதலான நூல்களைப் படித்தல் ஆகும். கந்தபுராணம், திருச்செந்தூர்ப் புராணம் முதலான நூல்கள் மிகவும் புனிதமான நூல்களாகக் கருதப்பட்டு ஆலய சந்நிதிகளிலே வாசித்துப் பயன் சொல்லப்பட்டு வந்தன. இதிகாச புராணங்கள் வீடுகளிலும்

மக்கள் கூட்டமாகத் தொழில் புரியும் இடங்களிலும் வாசிக்கப்பட்டுப் பயன் சொல்லப்பட்டன. கதைகளாக அமைந்த சமயநூல்கள் ஆலயங்களிலும் வீடுகளிலும் வாசிக்கப்பட்டன.

சோழர் காலத்திற் படித்துப் பயன் சொல்லப்பட்ட இதிகாசங்களின் செல்வாக்கு, ஈழநாட்டிலே தமிழ்ப் பேரரசர்களின் செல்வாக்கின் விளைவாகவும், பின்வந்த ஈழநாட்டு மன்னர்கள் அவற்றைப் பேணியதன் விளைவாகவும், பதினாறும் நூற்றாண்டளவிலே புராண, இதிகாசநூல்கள் படித்துப் பயன் சொல்லும் நூல்களாக மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்தன எனலாம். ஆனால், பதினாறும் நூற்றாண்டை அடுத்து ஐரோப்பியர் ஆட்சி ஏற்பட்டபோது, கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து மதங்கள் ஈழநாட்டிலே செல்வாக்குப் பெற்றன. இவைகளின் அடக்குமுறையும் பிரசாரவேகமும் கண்டனங்களும் புராணங்கள் படிக்கவேண்டிய அவசியத்தை மக்களிடையே வளர்த்தன. இவற்றைப் பொதுமக்கள் விளங்கிக் கொள்வதற்குக் கற்றறிந்தோரின் உதவி வேண்டப்பட்டது. இவர்களின் முயற்சியால் படித்துப் பயன் சொல்லும் முறை ஈழநாட்டிலே கைக் கொள்ளப்பட்டது. ஆரம்பத்தில் இம்முறையினைப் புராணம் வாசித்தல், புராணம் படித்தல் என்றவகையில் அழைத்தனர். 19 ஆம் நூற்றாண்டில் இம்முறையினைக் கற்றறிந்தோர் புராண படனஞ் செய்தல் என அழைக்கலாயினர். புராண படனஞ் செய்யும் நூல்களுள்ளே கந்தபுராணமே மிகவும் முக்கியம் பெற்று விளங்குகின்றது. புராணப் படிப்பென்றல் அது கந்தபுராணப் படிப்பையே குறித்து நிற்கும். அவ்வளவுக்குப் புராணப் படிப்பிற் கந்தபுராணம் உயர்நிலை பெற்று விளங்கியது. அவ்வகையிற் புராண படனச் செல்வாக்கும் உயர்நிலை பெறுவதாயிற்று. புராண படனஞ் செய்யும் முறை ஈழத்தில் எப்படித் தனித்துவம் பெற்று விளங்கிற்று என்ற ஆராய்வினைப் பார்க்கிலும் கந்தபுராணப் படிப்பானது எப்பொழுது ஈழநாட்டிலே ஆரம்பமாகியது என்ற ஆய்வே மேலோங்கி நிற்கின்றது எனலாம்.

புராணப் படிப்பானது வீரராகவன், ஆட்சிக் காலத்திலே கச்சிக் கணேசையர்மூலம் வந்ததென்பர் சிலர்[8]. வேறு சிலர் தமிழரசர்களோ வேளாளப் பிரபுக்களோ யாரோ புண்ணியவான்கள் கந்தபுராணம் என்ற சமயப் பொக்கிஷத்தை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வந்தார்கள் என்பர்.[9] கச்சியப்பரின் சகபாடியாகிய யாழ்ப்பாடியும் கச்சிக்கணேசையரும் காஞ்சியில் நடந்த கச்சியப்ப சுவாமிகளின் கந்தபுராண அரங்கேற்றத்திற் பங்குபற்றி அதனை யாழ்ப்பாணத்துக்குக் கொணர்ந்து புதியதோர் தனிமுறையை இந்நாட்டுக் கோயில்களுக்கேற்ப அமைத்துக் கோயில்கள்தோறும் கந்தபுராண படனத்தையும் ஏனைய புராண படனங்களையும் நடத்தியிருப்

---

8. குமாரசாமிப்புலவர். அ., தமிழ்ப் புலவர் சரித்திரம், சுன்னுகம், திருமகள் அழுத்தகம்.

9. பாக்கியம், பொன்., நாவலர் சரித்திர ஆராய்ச்சி, கொழும்பு, மெய்கண்டான் அச்சகம் (1970), பக். 64.

பார் என்பர் மேலுஞ் சிலர்[10]. இக்கூற்றின் கருத்துக்கள் ஆராயப்பட வேண்டியனவாகும். இங்கு கச்சியப்பருக்கும் கச்சிக் கணேசையருக்கும் உள்ள தொடர்பு ஒப்பிட்டு நோக்கத் தகும். யாழ்ப்பாடிக்கும் ஏனைய இருவருக்கும் உள்ள தொடர்புகள்பற்றி வரலாற்று நூல்கள் குறிப்பிட வில்லை. யாழ்ப்பாடியின் கதை நாட்டார் வழக்கியலைச் சார்ந்ததென்பர் வரலாற்று ஆசிரியர்.[11]

கந்தபுராணம் இயற்றிய கச்சியப்ப சிவாசாரியர், தொண்டை நாட்டிலுள்ள காஞ்சிபுரத்தைச் சேர்ந்த சைவப் பிராமணர். தமிழிலும் சங் கத மொழியிலும் நன்கு தேர்ச்சி பெற்றவர். மிகுந்த முருகபக்தர். இவர் வாழ்ந்த காலம்பற்றி இலக்கிய வரலாற்று ஆசிரியர்களிடத்தே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவரது காலம் எட்டாம் நூற்றாண் டென்பர் சிலர்.[12] திரு தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், இவர் வாழ்ந்த காலம் 16ஆம் நூற்றாண்டெனக் குறிப்பிடுவார்.[13] திரு. க. கனக சுந்தரம்பிள்ளை என்பார் 17ஆம் நூற்றாண்டினரென்பார்.[14] பேராசிரியர் கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் 12ஆம் நூற்றாண்டென்பார்.[15] கலாநிதி பொ. பூலோகசிங்கம் அவர்கள் இவரது காலம் 13ஆம் நூற்றாண்டிற்கும் 15ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலம் என்பார்.[16] தமிழ்நாட்டின் காலத்தின் தேவை, அவரது நூல்களிற் பரந்து காணப்படும் சைவசித் தாந்தக் கருத்துக்கள், முருகபரத்துவக் கருத்துக்கள் முதலானவற்றை ஒப்புநோக்கிப் பார்க்கையில் இவரது காலம் 12 ஆம் 13 ஆம் நூற்றாண் டிற்கு இடைப்பட்ட காலமாகவே காணப்படுகின்றது.

ஈழநாட்டிலே எழுந்த தமிழ் மக்கள் வரலாற்று நூல்களும், தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களும் இரு கணேசையர் வரலாறுகள்பற்றிக் குறிப் பிடுகின்றன. ஒருவர் கச்சிக் கணேசையர், மற்றொருவர் கொச்சிக் கணே சையர் ஆவர். கைலாசமாலை யாழ்ப்பாணக் குடியேற்றங்கள்பற்றிக் குறிப் பிடும்பொழுது சேதிராசன் என்பவனுடன் கச்சிக் கணேசையர் வந்தா ரெனக் குறிப்பிடும். இவர் ஓர் அந்தணர் வகுப்பினர். தொண்டை மண்ட லத்தைச் சேர்ந்தவர். தமிழ்மொழி, வடமொழி ஆகியவற்றில் நன்கு

---

10. கணபதிப்பிள்ளை, சி., ஆறுமுகநாவலர், சாவகச்சேரி, திருக்கணித அச்சகம், (1972),

11. இந்திரபாலா, கா., யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம், கண்டி நெஷனல் பிறின்டர்ஸ் (1972),

12. பூலோகசிங்கம், பொ., (பதிப்பு), பாவலர் சரித்திர தீபம், பகுதி 2, சுன்னாகம், திருமகள் அழுத்தகம், (1979), பக். 4.

13. கலைக்களஞ்சியம் (1960), தொகுதி - 7, பக். 436.

14. வையாபுரிப்பிள்ளை, ச., தமிழ் இலக்கியச் சரித்திரத்தில் காவியகாலம், (1957),

15. சுப்பிரமணியபிள்ளை, கா., தமிழ் இலக்கிய வரலாறு,

16. பூலோகசிங்கம், பொ., (பதிப்பு), பாவலர் சரித்திர தீபம், (1979), பக். 4.

தேர்ச்சியுடையவர்.[17] யாழ்ப்பாடியின் கதைச்சார்பில் இவரது காலத்தை ஒப்புநோக்குவோர், இவர் ஒன்பதாம் நூற்றுண்டவரென்பர்.[18] கச்சியப்பரின் காலம் சரியாக நிர்ணயிக்கப்படாதபோதும், பெரும்பாலான வரலாற்று ஆசிரியர்கள் இவர் பன்னிரண்டாம் நூற்றுண்டுக்குப் பிற்பட்டவரென்றே கருதுகின்றனர். இது எவ்வாறு இருப்பினும், கச்சியப்பருக்கும் கச்சிக் கணேசையருக்கும் இடையே சில நெருக்கமான தொடர்புகளை அவதானிக்க முடிகின்றது. இவர்கள் இருவரும் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்தவர்கள். கச்சி என்பது காஞ்சிபுரத்தைக் குறிப்பதால் இருவரும் ஒரே ஊரவர். இருவரும் பிராமண குலத்தைச் சேர்ந்தவர்கள். தமிழ்மொழி, வடமொழி ஆகிய இருமொழிப் புலவோர். இவ்விருவருக்கும் உள்ள வேறுபாடு, கச்சியப்ப சிவாசாரியார் காலத்தால் முற்பட்டவர்; கணேசையர் காலத்தாற் பிற்பட்டவர். முன்னவர் கந்தபுராணம் என்னும் தொல் நூல் ஆசிரியர்; பின்னவர் கச்சியப்பரின் தாசனுக விளங்கினுர். இதனுற்போலும் கணேசையர் தன்னைக் கச்சிக் கணேசையர் என அழைத்தாரெனக் கருத வேண்டியும் உளது. கச்சியப்பராற் கந்தபுராணம் தமிழ் நாட்டிலே பரப்பப்பட்டது; கணேசையராற் கந்தபுராணம் ஈழநாட்டிலே செல்வாக்குப் பெறத் தொடங்கிற்று. யாழ்ப்பாண இராச்சியத்திலே ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சி நிலைபெற்ற ஆரம்ப காலத்தின் பின், அரசர்களோடு வந்த அந்தணர் குழாத்தில் ஒருவராகக் கணேசையர் வந்து, ஈழநாட்டிலே குறிப்பாக யாழ்ப்பாண இராச்சியத்திலே கந்தபுராணத்தின் மகிமையை விளக்கி இருக்க முடியும். இதன் பயனுக யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராணக் கலாசாரம் என்று போற்றும் அளவிற்கு வளர்வதாயிற்று எனக் குறிப்பிடுவதில் எவ்வித தவறுமில்லையெனலாம். ஆயினும் இக்கருத்து மேலும் ஆராயப்படவேண்டியதொன்றே. கொச்சிக் கணேசையர் பதினேழாம் நூற்றுண்டின் பிற்பகுதியைச் சேர்ந்தவர். இவரும் அந்தணர் குலத்தவர்; தொண்டை மண்டலத்தைச் சேர்ந்தவர். வடமொழி, தமிழ்மொழி ஆகியவற்றில் தேர்ச்சி மிக்கவர். ஆனுல், இவரைக் கச்சியப்பருடன் ஒப்பிட்டு நோக்குதல் பொருத்தமுடையதன்று. இவரது தமிழ்மொழிப் புலமை இந்நூற்றுண்டுகளிலே கந்தபுராணம் தமிழ்மக்களிடத்தே செல்வாக்குப் பெறுவதற்குக் காரணமாக அமைந்ததென்பதை மறுப்பதற்கில்லை. ஒருவகையில் பதினைந்தாம் நூற்றுண்டிற்குப் பிற்பாடு, கச்சியப்பரின் அன்பரான கச்சிக் கணேசையரால் ஈழநாட்டிற்குக் கந்தபுராணம் கொண்டுவரப்பட்டு, அதனைக் கற்றோருக்கும் பொதுமக்களுக்கும் அறிமுகஞ் செய்து வைக்கும் வகையில் உருவாக்கப்பட்ட ஒரு யுத்தி அல்லது ஒரு ஊடக முறையாக புராண படன முறை ஈழநாட்டில் வளர்வதாயிற்று எனக் குறிப்பிடலாம்.

சைவசமயிகள் யாவர்க்குஞ் சிவபுராணங்களைக் கேட்க வேண்டுமென்பது பொதுநம்பிக்கை. இச்சிவபுராணங்களைத் திருக்கோயில், திருமடங்கள், தீர்த்தக்கரை முதலிய புண்ணிய தலங்களிலே பூசித்தலும் வாசித்தலும் பொருள் சொல்லுதலும் புண்ணியமென்பது சைவநூலோர் மரபு. புராணங்

17. முத்துத்தம்பிப்பிள்ளை, ஆ., *யாழ்ப்பாணச் சரித்திரம்*, (1915) பக். 93.

களைப் படிப்போர்களுங் கேட்போர்களும் பின்வரும் ஒழுங்குகளைக் கடைப் பிடிக்க வேண்டும் என்பர் பெரியோர்.[18]

**வாசிப்போர், பொருள் சொல்வோர்:**

வாசிப்போர் சரீரசுத்தி செய்து அநுட்டானம் பண்ணிய பின்னர் பீடமிட்டுப் புராணத் திருமுறையைப் பீடத்திலே வைத்து அதனையும் அதன் ஆசிரியரையும் அருச்சித்து வணங்கி இருந்து வாசிக்க வேண்டும்.

வாசிப்பவர் சபையோர் யாவருங் கேட்கும்பொருட்டுத் தெளிவாக வாசித்தல் வேண்டும்.

வாசிக்கும் காலத்திற்கும் எடுத்துக்கொண்ட விஷயத்தின் தன்மைக்கும் ஏற்ற இராகத்தில் வாசித்தல் வேண்டும். எச்சுருதியில் எவ்விராகத்தில் வாசிக்கப்படுகின்றதோ அச்சுருதியில் அவ்விராகத்திற் பொருள் சொல்லவேண்டும்.

இலக்கணப் பிழையில்லாமலும் வெளிப்படையாகவும் பொருள் சொல்லவேண்டும்.

**கேட்போர்:**

புராண படனஞ் செய்யப்படும்பொழுது கேட்பவர்கள் ஸ்நானஞ் செய்து, தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்து, நித்திய கருமம் முடித்துக்கொண்டு, படிக்கும் நூலினை நமஸ்கரித்துப் பிறிதொன்றிலுங் கருத்தைச் செலுத்தாது சிரத்தையோடு கேட்கவேண்டும்.

**அடாதசெயல்:**

சிவபுராணம் படிக்கும்பொழுது உயர்ந்த ஆசனத்திலிருத்தல் நித்திரை செய்தல், வெற்றிலை போடல், போர்த்துக் கொள்ளுதல், வீணுகப் பேசுதல், எழுந்து திரிதல், சிரித்தல், வாசிப்போரை அவமதித்தல் என்பன தீய செயல்களாகும்.

மேற்காட்டிய ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடிப்பவர்கள் வேண்டிய வரங்களைப் பெறுவதோடு முத்தியடைவர் என்பது முக்காலத்துஞ் சத்தியம் என்பர் நாவலர் பெருமான்.[19] இத்தகைய ஒழுங்கு விதிகள் எத்தேசத்தவர்களுக்கும் பொருத்தமுடையன.

புராண படனம் என்பது சந்நிதி விரோதமின்றி ஒருவர் வாசிக்க மற்றெருவர் பயன் சொல்லும் முறையாகும். இது ஈழநாட்டிற்கே[20]

---

18. ஆறுமுக நாவலர், (பதிப்பு) கந்தபுராணம், சென்னை, வித்தியாநுபாலனயந்திரசாலை, (1935) முன்னுரை.

19. மேலது நூல், முன்னுரை.

20. கணபதிப்பிள்ளை, சி., ஆறுமுகநாவலர், (1979) பக். 4.

குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கே உரிய சிறப்பு முறையாகும். நாவலர் காலத்திலே புராண படனம் உயர்நிலை பெற்று இன்று சிவ சந்நிதியிலே மிகுதியாக நடைபெற்று வருகின்றது. சிவ சந்நிதி, சிந்தனை, வாக்கு, செயல் மூன்றும் இறைவனடியிற் சென்று குவிதற்கும் அவன்புகழ் இயம்புவதற் கும் உரிய இடம் எந்த நிகழ்ச்சியும் இறைவனைப் பராமுகஞ் செய்தற் குபகாரமாயிருக்காது[21] என்ற பெருமதிப்புக்குரிய இடமாகும். இவ்வடிப் படை உண்மைகளை நன்கு மனங்கொண்டே ஈழநாட்டவர் புராண பட னங்களை ஆற்றி வருகின்றனர். ஈழத்தின் புராண படனச் சிறப்புப்பற்றி இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் பின்வருமாறு குறிப் பிடுவார்.[22]

> ''இறைவன் சந்நிதியில் மலபந்தனுன மனிதன் ஒருவன் தலைமை வகிப்பதும், ஒருவரையொருவர் புகழ்ந்து சொற் பொழிவு நிகழ்த்துவதும் சந்நிதி விரோதமாம். புராண பட னங்கூட வடக்கே இறை சந்நிதியில் நடப்பதில்லை. அங்கே வித்தியா மண்டபம் புறம்பாயுண்டு. நமது நாட்டிலுள்ள சிறிய கோயில்களில் புறம்பாய் மண்டபமின்மையால் இறை சந்நிதியிலேயே சந்நிதி விரோதம் நிகழாத முறையிற் புராண படனம் நடந்துவருகின்றது. ஒருவர் தலைமை வகித்து இன் னுர் வாசிப்பார், இன்னுர் பயன் சொல்லுவார் என்று சொல்வ தில்லை. சொல்லாமலே காரியம் நடக்கும். அசுரன் ஒரு வன் சுவாமியை இழித்துரைக்கும் பகுதியைப் படிக்கும் போதும் அவன் அறியாமைக்கிரங்கிச் சுவாமியின் பெருமை யில் விம்மிதங் கொள்ளும் முறையிலேயே புராண படனம் நடக்கும்.''

ஈழநாட்டிலே புராண படனஞ் செய்யப்பட்டு வரும் நூல்களுள்ளே கந்தபுராணம் முதன்மைமிக்க நூலாகும். இந்நூல் இந்நாட்டின் சைவ மக்களின் சமய, கலாசார மறுமலர்ச்சியில் முக்கிய பங்கினை வகித்து வருகின்றது. கம்பராமாயணம், பாரதம் முதலான நூல்களைவிடப் புராண படனஞ் செய்வதற்கு ஏற்றதாய் அமைந்திருப்பது இதன் தனிச் சிறப் பாகும். ஈழநாட்டிலுள்ள கற்ருேரும் மற்ருேருங் கந்தபுராணத்தை அருள் நூல் வரிசையிலே வைத்து ஒரு திருமுறையாகவே போற்றி வருகின்றனர். பழைய காலந்தொட்டே ஆலயங்களிலும் மடங்களிலும் கந்தபுராணம் படித்துப் பொருள் சொல்லப்பட்டபொழுதும் நாவலரவர்கள் காலத்தி லேயே புராண படனம் உயர்நிலை அடைந்தது. 19 ஆம் நூற்ருண்டின் சமய, அரசியற் சூழ்நிலையும், பழைய சமய மரபுகளைப் புதிய வடிவிற் பேணும் முயற்சியும், நாவலரவர்களின் அயரா முயற்சியும் இப்புராண படன முறை அவர் காலத்தில் உயர்நிலை பெற்றதற்குக் காரணமாக அமைந்தன என லாம். நாவலரவர்களைச் சமய சிந்தனைக்கு இட்டுச் சென்ற நூல் கந்த புராணமேயாகும். 'நாவலரவர்களுக்குச் சைவசித்தாந்த உணர்ச்சி கந்த புராணத்திலிருந்தே வந்தது, அவரை அறியாமலே கந்தபுராணம் நாவலர்

---

21. மேலது நூல், பக். 4.
22. மேலது நூல், பக். 4.

இரத்தத்தில் ஊறியிருந்தது'[23] என்ற கூற்று இங்கு மனங் கொள்ளத்தக்க தாகும்.

ஈழநாட்டிலே ஆண்டுதோறும் மூன்று மாதம் கந்தபுராணப் படிப்பு நடைபெறும். இப்படிப்புச் சந்நிதி விரோதமின்றி முருகன், சிவன், பிள்ளை யார், அம்மன் ஆலயங்களிலே சிறப்பாக நடைபெற்று வருகின்றது. ஆலய மகோற்சவம் ஆரம்பிப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பாக இப் படிப்பினை ஆரம்பித்து மகோற்சவ ஆரம்பத்தோடு முடிப்பர். இது எல்லா ஆலயங்களுக்கும் உரிய சிறப்பான வழக்கமாதல் கண்கூடு. கந்த புராணப் படிப்பினைச் சிறப்பாக நடத்த முடியாத ஆலயங்களிலே கந்த புராணத்தின் பிரதான காண்டங்களிலொன்றினைப் புராண படனத்திற்குத் தெரிவுசெய்து படிப்பர். ஐப்பசி மாதம் பூர்வபக்கப் பிரதமைமுதல் சட்டி வரை ஆறுநாட்கள் அனுட்டிக்கப்படும் கந்தசட்டி விரதத்தின்பொழுது சூரபன்மன் வதைப் படலம், ஈழநாட்டின் பெரும்பாலான முருகன் ஆல யங்களிலே புராண படனஞ் செய்யப்படுவது இதற்கோர் சிறந்த எடுத்துக் காட்டாகும். கந்தபுராணத்தை முழுமையாகப் படிக்குங் காலத்திலே பொதுமக்கள் அதனைக் கேட்கும் ஆர்வத்தைக் காட்டிலும் கந்தசட்டி விழாக் காலத்திலே சூரபன்மன் வதைப் படலமும் அடுத்த நாள் தெய்வ யானையம்மை திருமணப் படலமும் படிக்குங் காலத்தில், விரத ஒழுக்க நெறியும் புராண படனக் கட்டுக்கோப்பும் மாறாது கடைப்பிடிக்கும் பக் தர்களின் பக்தி ஆர்வம் மிக விசாலமானதும் ஆழமானதுமாகும். இக் காலப் பகுதியிற் கந்தபுராண படனம் ஏனைய சமய பக்தி இலக்கியங்கள் பெறமுடியாத முக்கிய இடத்தினைப் பெறுவதோடு, பக்தி என்ற சாதனை யியலில் முதன்மையான இடத்தினையும் பெற்று விளங்குகின்றது. இச்சாதனை யால் பக்தனுக்கும் இறைவனுக்கும் உள்ள உறவினை மிகவும் நெருக்க மடையச் செய்வதற்கு ஏற்றதோர் ஊடகமாகவும் இந்நூல் திகழ்கின்றது எனலாம்.

ஈழநாட்டிலே உள்ள ஒவ்வோர் ஆலயத்திலும் பல்வேறு மாதங்களி லும் புராண படனம் ஆரம்பமாகி நடைபெறும். பயன் சொல்வோரும் வாசிப்போரும் ஒரே இடத்தில்மட்டும் புராண படனஞ் செய்ய வேண்டு மென்ற நியதியில்லை. நாட்டின் பல்வேறு பகுதிகளுக்குஞ் சென்று வாசித் துப் பயன்சொல்லி வரலாம். இங்கு படித்துப் பயன் சொல்லும் முறை தனித்தன்மையுடையதோர் முறை. கோயிற் சந்நிதானத்திலே வலது பக்கத்தில் வடக்குமுகமாக இருந்து, ஒருவர் பாட்டை வாசித்துப் பொருளுக்கேற்பப் பிரித்துக் கொடுப்ப மற்றொருவர் கிழக்குமுகமாக இருந்து பொருள் சொல்லுவார். புராண படனத்தைத் தொடங்குவதற்கு முன்பாகப் 'புத்தக பூசை' ஆரம்பித்து, பீடத்திலே வைத்து கற்பூரவொளி பிரகாசித்திருக்க மரபுநெறிக்கமைய ஆலய அந்தணர் காப்புச் செய்யுளைப் படித்துப் புராண படனத்தை ஆரம்பித்து வைப்பார். இது ஆலயங்களிலே நடைபெறும் புராண படன முறைக்கே சிறப்பு விதியாகும். வீடுகளிலும் மடங்களிலும் நடைபெறும் புராண படன முறையும் மேற்காட்டிய விதிப் படி ஆலயபூசகரின்றி நடைபெறும். காப்புச் செய்யுளைப் படிக்க ஆரம்

23. கணபதிப்பிள்ளை, சி., கந்தபுராணக் கலாசாரம் (1959), பக். 20.

பிக்கும்பொழுது தோடி, காம்போதி, பைரவி இராகங்களிலே ஆரம்பிக்க வேண்டும் என்பது பொது விதியாகும். ஆனால் தோடியில் ஆரம்பித்தலே சிறப்பு விதியாகப் பேணப்பட்டு வந்தது. இப்புராண படனம் கோயில்களிலும் பிறஇடங்களிலும் காலையிலும் மாலையிலும் நடைபெற்று வருகின்றது. காலையிலே தோடி இராகத்திலே ஆரம்பித்துப் பிலகரி, பூபாளம் முதலான இராகங்களிலே படிக்கப்படுவதே சிறப்புடையதென்பர். மாலையிலே தோடியுடன் தொடங்கி பூர்வகல்யாணி, கல்யாணி, பந்துவராளி முதலான இராகங்களிலே வாசிக்கப்படுவதே சிறந்ததென்பர். பாடல்களிலே வருகின்ற போர், வீரம், சிருங்காரம், கருணை முதலான இரசங்களுக்கேற்ப, நாட்டை, அடாணு, சாருகேசி, மோகனம் போன்ற இராகங்களிலே வாசித்துப் பயன் சொல்லப்படுவது வரவேற்கப்படும். ஆனால் சங்கராபரணம் பைரவி, ஆனந்தபைரவி, சகானு, ஆரபி முதலான இராகங்களிலே புராணம் படித்துப் பயன் சொல்லப்பட்டு வருவது பொது வழக்காகும். எல்லா இராகங்களும் எல்லோர்க்கும் கைவராதபடியாற் காம்போதி, பைரவி இராகங்களிலே படித்துவருவதும் பெருவழக்காகும். புராணங்களுக்கான இராக நியதி மாற்றப்படுவதை யாரும் விரும்பியதில்லை.[24]

புராண படனத்திற் பொருள் சொல்லும்பொழுது முதற் பதப் பொருள், பின்னர் பொழிப்புரை, விசேடவுரை என்ற வகையிற் சொல்லி முடிப்பர். இவற்றிடையே பொருள் சொல்வோரின் வித்துவ ஆற்றலுக்கேற்ப அவரது இலக்கண அறிவும், இலக்கிய அறிவும் வெளிப்பட்டு நிற்கும். சில சமயங்களில் கேட்போரின் நிலை அறிந்து பாட்டின் நயத்தினைப் பயனோடு சேர்த்துச் சொல்லும் சிறப்பு மரபு வழக்கில் உண்டு. புராணத்தை வாசிக்கும்பொழுது வாசிக்கவேண்டிய இராக மரபிற்கேற்ப வாசிப்பதை ஆரம்பித்துப் பாடலை முதலில் முழுமையாகவும் பின் பகுத்தும் வாசிப்பர். ஒரே வகையில் ஒருபாடலை இருமுறை வாசித்தல் வேண்டும். அவ்வாறு வாசிக்கும்பொழுது, சிலர் பாடலொவ்வொன்றை ஒவ்வோர் இராகத்திலும் வாசிப்பர். ஒருபாடல் நான்கு அல்லது ஐந்து இராகங்களில் வாசிக்கப்படலாம். அப்படி வாசிக்கும்பொழுது பயன் சொல்லவரும் அதே இராக, சுருதிக்கேற்பப் பயன் சொல்லுதல் வேண்டும். ஒருவர் புராணத்தை வாசித்துப் பிறிதோர் ஆசிரியரிடம் வாசிப்பதற்கு ஒப்படைக்கும்பொழுது, வாங்குவோர் முதல் ஆசிரியர் விட்ட இராகத்திலே தொட்டு வாசித்த பின்னரே பிறிதோர் இராகத்திற்கு மாற்றி வாசித்தல் மரபு வழிப்பட்ட வாசிப்பு முறையாகும். புராண படனத்தை நிறுத்தும்போது மங்களமான நிகழ்ச்சியோடே நிறுத்தி வைப்பர்.

புராணத்தை ஆரம்பிக்கும்பொழுதும் முடிக்கும்பொழுதும் அவசியம் 'திருச்சிற்றம்பலம்' என்று சொல்வதோடு, புராண படனஞ் செய்யும்

---

24. ஒரு பொழுது புராணம் வாசிக்கும் ஒருவர், தனது இராகத்தை வேண்டாதவிடத்தே மாற்றி சிந்துபைரவி இராகத்தைப் பாட ஆரம்பித்தார். உடனே சபையோரும் பயன் சொல்லுபவரும் வாசிப்பவரைப் பார்த்து, ''இது என்ன கூத்துக் கொட்டகையா?'' என்று கண்டனம் செலுத்தியமை மேற்காட்டிய உண்மைக்கு ஒரு துளி.

நூலுக்கேற்ப ஆசிரியரை, உதாரணமாகக் கந்தபுராணம் வாசிக்கப்படும் நூலானல் 'கச்சியப்பசிவாசாரியார் சுவாமிகள் திருவடி வாழ்க' என வாழ்த்தி வணங்கி முடித்தல் வேண்டும்.

புராண படனஞ் செய்யுங் காலத்திற் புராணத்திலே கூறப்படுஞ் சம் பவங்களைப் பாவனைப்படுத்தி விழாக் கொண்டாடுவதும், விசேட பூசை மேற்கொள்வதும், நைவேத்தியங்கள் படைப்பதும் சிறப்பான வழக்க மாகும். சூரபன்மன் போர், கயமுகாசுரன் போர், திருகல்யாணப் படிப்பு களின்போது ஆலயத்திற் சிறப்பான பூசை, விழாக்கள் கொண்டாடப்படு வதும், வேல் அபிஷேகம், அவ்வப்பொழுது நைவேத்திய வழிபாடுகள் செய் வதும் புராண படனச் செல்வாக்கின் வழிவந்த பெருவிழாக்களாகும். சிறப் பாக கந்தபுராண படனத்தின்பொழுது இவற்றின் நடைமுறைச் செல்வாக் கினையும் அதன் பயனையும் நாம் கண்டு தெளியலாம்.

ஈழநாட்டிலே புராணப் படிப்பானது ஒரு தெய்வீகப் பணியாகவே இருந்து வருகின்றது. புராண படனஞ் செய்வோர் பயன் கருதாது தமது செயலை ஆற்றிவருவர். படன முடிவில் இறுதியன்று 'புத்தக பூசை' என் னுஞ் சடங்கு நடைபெறும். அப்பொழுது, சிவாசாரியரால் புராணநூல் பூசைக்கு உட்படுத்தப்பட்டு, வாத்திய இசையும் மணியோசையும் ஒலிக்க வீதிவலம் வந்து, புராணத்தை ஆலயத்திற்குட் கொண்டு செல்வர். பின் புராணப் படிப்பின் உபயகாரர்களுங் காப்புக் கட்டிப் புராணபயன் பெற் ரோர்களும், புராண படனஞ் செய்த ஆசிரியர்களுக்குக் காணிக்கை செலுத்தி, வணங்கி வழிபட்டு நிற்பர். இதன்மூலம் ஆசிரியர் பூவுலகில் வாழ்ந்து மேலும் பலருக்கு உபதேசம் செய்வதற்காக வேண்டி, காணிக்கை யைப் பெற்றுக் கொள்வார். இவை சிறப்பாக ஈழநாட்டிலே புராண படனஞ் செய்யும்பொழுது மேற்கொள்ளப்படும் மரபு வழிப்பட்ட நடை முறை ஒழுங்கு விதிகளாகும்.

புராண படனத்தின் சிறப்பும் ஆளுமையுங் கந்தபுராணத்தைத் தொட்டே ஏற்பட்டன. 'புராண படனம்' என்னும் சொல் கந்தபுராணப் படிப்பினையே சிறப்பாகக் குறித்து நிற்கும். ஈழநாட்டு மக்களிடையே புராண பாரம்பரியத்தையும் கலாசார மரபினையும், தத்துவ சிந்தனையை யும், சமய நோக்கினையும் வளர்த்துச் சென்றது கந்தபுராண படனமாகும். அது புராண படனம் என்னும் அமிர்தாஞ்சனமாகத் திரட்டி மக்களிடையே அளிக்கப்பட்டது. இதற்குச் சிறியோர், பெரியோர், உயர்ந்தோர், தாழ்ந் தோர், கற்றோர், கல்லாதோர், ஆண், பெண் என்ற பாகுபாடுகளே இருக்கவில்லை. வேண்டியவாறு யாவரும் பலன் பெற்று உய்திபெற வாய்ப் பளித்தது. தமிழ் நாட்டைப் பார்க்கிலும் ஈழநாட்டிலே கந்தபுராண பாரம்பரியத்தின் செல்வாக்கு மிகமிக அதிகம். இந்நூல் ஈழநாட்டு மக்களை வளம்படுத்தியதுபோல் தமிழ் நாட்டு மக்களின் உணர்வுகளிற் களிநடம் புரியவில்லை. அதற்கு அங்கு காணப்பட்ட பலவகைப்பட்ட சமய கலாசார அநுசரணை முறைகள் காரணமாக இருக்கலாம். ஈழநாட்டிலே கந்தபுராணப் படிப்பின் வழிவந்த செல்வாக்கினைப் பின்வருமாறு சிறப் பித்துக் குறிப்பிடுவர் நாவலர். ''இந்தியாவிலே சிவபுராணப் பிரசங்கஞ் செய்யுங் கோயில்கள் மிக அரியன; இத்தேசத்திலே அது செய்யப்படாத

கோயில் இல்லை. இந்தியாவிலோ வித்துவான்கள் சைவசமய குருமார் முத லியோருள்ளும் கந்தபுராணம் முதலியன அறிந்தோர் சிலர்; இத்தேசத்திலோ பெண்களுள்ளும் அவை அறியாதார் இலர்.''[25] என்பது அவர் கூற்று. பண்டிதமணி திரு. சி. க. அவர்கள், ''கந்தபுராணம் யாழ்ப்பாணப் பெண் களின் உதரத்தில் நன்கு ஊன்றியிருந்தது. சில பெண்கள் பிறந்த அகத்திலும் பார்க்கப் புக்க அகத்திற் பிரகாசிக்கின்றார்கள். அவ்வாறே கந்தபுராணமும் பிறந்த அகத்திலும் பார்க்கப் புக்க அகமாகிய யாழ்ப்பாணத்திலே மிக மிகப் பிரகாசித்துப் பல நூற்றாண்டுகளாகப் பயன்பட்டு வருகின்றது''[26] எனக் குறிப்பிட்டுச் சொல்வார். ஈழநாட்டிலே பெண்கள் கந்தபுராணப் படிப்பிலே மிகுந்த ஈடுபாடு காட்டிய காலஎல்லையின் பேரெல்லையாக 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியினைக் கொள்ளலாம். ஆயினும், இன்னும் அம்மரபு முற்றாக மறைந்துவிட்டதென்று சொல்வதற்கில்லை.[27] கிறிஸ்தவ பாதிரி மார் சைவசமயத்திற்கெதிராகச் சமயப் பிரசாரஞ் செய்து, சமய மாற் றஞ் செய்யவிழைந்த காலத்திலும், மரபு வழிப்பட்ட கந்தபுராண சிந் தனைகள், கிறிஸ்தவர்களாக மாறியோரையும் மாறவிழைந்தோரையும் நல் வழிப்படுத்தியதோடு, முழுமையான சமய மாற்றங்களிலிருந்து மக்களைக் காப்பாற்றிய பெருமையும் ஈழத்தில் வளர்ந்த கந்தபுராண சிந்தனைக்கு உண்டு. ''சுதேசிய கிறிஸ்தவர்களும், பைபிள் வசனங்கள் எல்லாம் ஒருங்கு திரண்டுங் கந்தபுராணத்து அவைபுகு படலத்தினும், அமைச்சியற் படலத்தினும் உள்ள பதியிலக்கணத் திருவிருத்தங்களுள் ஒன்றினது ஓரடிக்குத்தானும் ஆற்றாது! ஆற்றாது! என்ன அற்புதம்![28] என ஆவலிப்பர்'' என்ற கூற்று இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கதாகும்.

ஈழநாட்டிலே ஏற்பட்ட கந்தபுராண வளர்ச்சி பல புலவர்களையும் பல உரையாசிரியர்களையும் தோற்றுவித்ததோடு, கந்தபுராணத்தையும், புராண படனஞ் செய்ய ஏற்ற மற்றும் நூல்களையும் பதிப்பிக்கவுந் தூண்டியது. புராண படன வளர்ச்சியின் உயர் எல்லையில் விளங்கிய நாவலரவர்களே முதன் முதலிற் கந்தபுராணத்தைப் பதிப்பித்து வெளி யிட்டார். அவரது பாடபேதமற்ற பதிப்பு ''நல்ல பதிப்பென்றால் நாவலர் பதிப்பு'' என்ற உயர் மதிப்புக்குக் காரணமாயிற்று. இந்நூலினைச் சென்ன

---

25. கைலாசபிள்ளை, த., (தொகுப்பு) ஆறுமுகநாவலர் பிரபந்தத் திரட்டு, சென்னை, வித்தியாநுபாலன யந்திரசாலை, 1954,

26. கணபதிப்பிள்ளை, சி., கந்தபுராண கலாசாரம், 1959, பக். 35.

27. பண்டிதைகள் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திருமதி. து. சத்திய தேவி, திருமதி. ச. அமிர்தாம்பிகை, திருமதி. நா. பாக்கியம் முதலா னோர்கள் ஆலயங்களில் புராண படனஞ் செய்து வருவதும், பல்வகைப் பெண்கள் புராணப் படிப்பு விதிமுறை தவறாது கேட்டு வருவதும், படிப் போர் விடும் பிழைகளை மனங்கோணாது கேட்பதும் அன்றுபோல் இன் றும் நடைபெற்று வருவதும் பெண்களுக்குள்ள புராண படன ஈடு பாட்டினைக் காட்டிநிற்கும்.

28. கைலாசபிள்ளை, த., (தொகுப்பு) ஆறுமுகநாவலர் பிரபந்தத் திரட்டு, (1954), முதலாம் பாகம். பக். 75.

பட்டணம், வர்த்தமான தரங்கிணீசாகை அச்சுக்கூடத்திலே சுக்கில ஸூ சித்திரை மாதம் (1869) பதிப்பித்து வெளிப்படுத்தினர். அந்நூலிலே நாவலரவர்கள் புராண படனம் எவ்வாறு நிகழவேண்டும் என்பதை முதன் முதல் 'சிவபுராண படன விதி' என்னும் தலைப்பின்கீழ் மிகவும் கட்டமைப்பாகக் குறிப்பிட்டுள்ளமை, கந்தபுராணம், புராண படன நெறியிற் பெற்றிருந்த முக்கியத்துவத்தை வெளிப்படுத்தி நிற்கும். அத்துடன் கந்த புராணத்தின் மகிமையைப் பாமரமக்கள் மிகவும் இலகுவாக விளங்கிக் கொள்ளும்பொருட்டுக் கந்தபுராணத்தைக் கத்திய ரூபமாகச் செய்து, சென்னபட்டணம் வாணிநிகேதன அச்சுக்கூடத்தில் துன்மதி ஸூ ஆவணி மாதம் (1868) பதிப்பித்து வெளிப்படுத்தினர்.[29] நாவலரைப் போன்று வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளை[30], சாவகச்சேரி ச. பொன்னம்பலபிள்ளை[31], வல்வை ச. வைத்திலிங்கபிள்ளை[32], வி. சுப்பிரமணிய ஐயர்[33], காரைதீவு கா. சிவசிதம்பரஐயர்[34], மேலைப்புலோலி வே. சிதம்பரப் பிள்ளை[35], உடுப்பிட்டி சிவசம்புப்புலவர்[36], நவிண்டில் சு. சிவானந்தையர்[37], பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை[38], நவாலி வே. நல்லையா, சுழிபுரம்

---

29. நாவலர் கந்தபுராண அசுர காண்டம் – அசுரயாகப் படலம்வரையே வசனம் எழுதினர். மிகுதிப் பகுதியைக் கோப்பாய் ச. பொன்னம்பல பிள்ளை வசனரூபமாக எழுதிமுடித்து சாதாரண ஸூ பங்குனி மாதம் (1911) சென்னை வித்தியாநுபாலன யந்திரசாலையிலே அச்சிட்டு வெளிப்படுத்தினர்.

30. கந்தபுராணத்தின் மூலத்தைப் பரிசோதித்து 1883 ஆம் ஆண்டு, யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச யந்திரசாலையில் அச்சிற் பதிப்பித்தார்.

31. இவர் அண்டகோசப் படலத்திற்கு உரைகண்டுள்ளார்.

32. தக்ஷ காண்டத்தின் வள்ளியம்மை திருமணப் படலத்திற்கும், தேவ காண்டத்தின் தெய்வயானை திருமணப் படலத்திற்கும், அண்ட கோசப் படலத்திற்கும் இவர் உரை எழுதியுள்ளார். இவர் சூரபன்மன் வதைப் படலத்திற்கு எழுதியவுரை முற்றுப்பெறவில்லை என்பர்.

33. அண்டகோசப் படலத்திற்கு (1884) உரை எழுதியுள்ளார்.

34. இவர் மகேந்திர காண்டத்திற்கு உரை எழுதியுள்ளார் என்பர் பொ. பூலோகசிங்கம். பாவலர் சரித்திர தீபம், (பதிப்பு) (1979) பக். 7. இவர் சில படலங்களுக்கு உரைஎழுதியுள்ளார் என்பர். F. X. C. நடராசா, காரைநகர் மான்மியம், (1971) பக். 159.

35. யுத்தகாண்டத்தின் சூரபன்மன்வதைப் படலத்திற்கு (1938) உரை எழுதியுள்ளார்

36. தக்ஷ காண்டத்தின் வள்ளியம்மை திருமணப் படலத்திற்கு 1901 உரை கண்டுள்ளார்.

37. கந்தவிரதப் படலத்திற்கு சார்வரி ஸூ மாசிமீ (1901) உரை எழுதி வெளியிட்டார்.

38. தக்ஷ காண்டத்திற்கு உரை எழுதி 1967 ஆம் ஆண்டு சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் பதிப்பித்து வெளியிட்டார்.

கா. கார்த்திகேசு யோகி[40] முதலானோர்கள் கந்தபுராணத்தின் சில காண்டங்களுக்கும் சில படலங்களுக்கும், அவருட் சிலர் முழுவதற்கும் உரை கண்டுள்ளனர். சு. சிவபாதசுந்தரம் கந்தபுராண விளக்கம் என்னும் நூலையும், காசிவாசி செந்திநாதையர் கந்தபுராண நவநீதம் என்ற நூலையும் வசன வடிவிலேயே எழுதி வெளியிட்டுள்ளனர். இத்தகைய உரை நூல்களையும், வசன நூல்களையும் எழுதிய ஈழநாட்டோர் கச்சியப்பசிவாசாரியாரின் கவித்துவத்தைக் கலையுணர்வுடன் விமர்ச்சிக்கும்பொருட்டு எழுத முற்பட்டனரன்று; நாவலரவர்களின் அடிச்சுவட்டின் நின்று, மக்களிடையே சமய பக்தியையும் ஆன்ம நேயத்தையும், கலாசார பாரம்பரியத்தையும் வளர்த்தற்பொருட்டே எழுதி வெளியிட்டனர் எனலாம். கந்தபுராணத்தை மூலமாகவும் உரைகளாகவும் வசனங்களாக எழுதியும் மிகவும் கூடுதலான பதிப்புக்களை வெளியிட்டோர் ஈழத்தவர்களே ஆவர். இவ்வகையிலே ஈழநாட்டு மக்களுக்கும் கந்தபுராணத்திற்கும் உள்ள ஈடுபாடு உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு போன்று ஒன்றையொன்று பிரிக்க முடியாததொன்றாகும்.

ஈழநாட்டிலே கந்தபுராணப் படிப்பின் முக்கியத்துவத்தையும் பயன்பாட்டையும் அனுபவரீதியாக நன்கு உணர்ந்த நாவலரவர்கள் தமிழ் நாட்டுச் சைவர்களின் நிலைகண்டு மனம் நொந்தார். தனது ஆற்றாமையைப் பின்வருமாறு வெளிப்படுத்தினார்[41]:-

> ''தேவாரம் பெற்ற சிவத்தலங்களுக்குள்ளே திருக்கோணமலை, திருக்கேதீச்சரம் என்னும் இரண்டையும், திருப்புகழ் பெற்ற சுப்பிரமணியத் தலங்களுள்ளே கதிர்காமம் என்னும் ஒன்றையும் உடைத்தாகிய ஈழதேசமெங்குமுள்ள சிவாலயம், விக்கினேசுவராலயம், சுப்பிரமணியராலயம் என்னுந் திருக்கோயில்களெல்லாவற்றிலுங் கந்தபுராணம் பண்டைக் காலந்தொடங்கி வருஷந்தோறுந் தவறாது வாசித்துப் பொருள் சொல்லப்பட்டு வருகின்றது. அங்கங்குள்ள ஆண் பெண் என்னும் இருபாலாரும் வாசிப்போரையும் பொருள் சொல்வோரையும் வழிபட்டு இதனை நியமமாகக் கேட்டுவருகின்றார்கள். இந்தியாவிலே சைவசமயிகளுள்ளுஞ் சைவசமயத்தில் உட்பற்றில்லாதவர் பலர் உளர். எனவே, இத்தேசங்களிலுள்ள திருக்கோயிலதிகாரிகளும் மடாதிபதிகளும் தங்கள் தங்கள் திருக்கோயில்களினும் மடங்களினும் இக்கந்தபுராணத்தை வருஷந்தோறும் வாசித்துப் பொருள் சொல்லும்படி செய்வார்களாயின் இங்குள்ள சைவசமயிகளும் இதனை நியமமாகக் கேட்டுய்வார்களே''

---

39. கந்தபுராணம் முழுவதற்கும் உரை கண்டுள்ளார்.

40. கந்தபுராணம் யுத்தகாண்டத்திற்கு உரை எழுதியுள்ளார். சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் அச்சிட்டு 1971 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இவர் கந்தபுராணம் முழுவதற்கும் உரை எழுதியுள்ளார் என அறியமுடிகின்றது.

41. ஆறுமுகநாவலர், (பதிப்பு) கந்தபுராணம், சென்ன பட்டணம், வர்த்தமான தரங்கிணீசாகை அச்சுக்கூடம், (1869),

புராணப் படிப்பிலே கந்தபுராணத்திற்கு அடுத்து வைத்து எண்ணப் படுவது சேக்கிழார் இயற்றிய திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணமாகும். பெரியபுராணப் படிப்பு, கந்தபுராணப் படிப்பைப் போன்று பெரும்பாலான ஆலயங்களிலே தொடர்ந்து மூன்று மாதங்கள் படிக்கப்படாவிட்டாலும் ஆங்காங்கே சில ஆலயங்களிலும் மடங் களிலும் மூன்று மாதங்கள் புராண படனஞ் செய்யும் வழமை இருந்து வருகின்றது. ஏழாலை நால்வர் மடத்திலும், நல்லூர் மடத்திலும், கீரிமலை சிருப்பர் மடத்திலும், துர்க்கை அம்மன் கோயிலிலும் (தெல்லிப்பழை), விளிசிட்டி ஞானவைரவர் ஆலயத்திலும் பெரியபுராணம் மூன்று மாதங்கள் படிக்கப்பட்டு வருகின்றது. மடங்களிலே ஏழாலை நால்வர் மடத்திலே வைகாசி மாதத்தில் வரும் சேக்கிழார் குருபூசைக்குமுன் புராணப் படிப்பை ஆரம்பித்து ஆடிமாதம் சுந்தரமூர்த்தி நாயனர் குருபூசையுடன் முடி வடையும். ஆலயங்களிலே காலையிலும் மாலையிலும் இப்புராணப் படிப்பு நடைபெறும். மடங்களிலும், வீடுகளிலும் மாலையே புராணப் படிப்பு நடைபெறும். தொழில்நிலையங்களிலே காலையிலேயே சிறப்பாகப் புராணம் வாசிக்கப்படும். கந்தபுராணப் படிப்பிலே கைக்கொள்ளப்படும் மரபுவழி விதிமுறைகளே இப்படிப்பின்போதுங் கைக்கொள்ளப்படுகின்றன. புராணம் பூசைக்குட்படுத்தப்பட்ட பிற்பாடு, சிவாசாரியரே காப்புச் செய்யுளைப் படித்து இப்படிப்பினை ஆரம்பித்து வைப்பார். ஆரம்பிக்கும்பொழுதும் முடிக்கும்பொழுதும் 'திருச்சிற்றம்பலம்' என்று சொல்லி முடிக்குந்தோறுஞ் 'சேக்கிழார் சுவாமிகள் திருவடி வாழ்க'! என வாழ்த்தி வணங்கி முடிப்பர்.

நாவலரவர்களுக்குக் கந்தபுராணத்தில் இருந்ததுபோன்றே பெரிய புராணத்திலும் ஈடுபாடு இருந்துவந்தது. கந்தபுராணத்தைப் பதிப்பிப் பதற்கு முன்பாகவே நாட்டின் அரசியல், சமூக, சமய சூழ்நிலைகளை மனத்திற் கொண்டு, பெரியபுராணத்திற் கொண்ட ஈடுபாட்டினுல் அந் நூல் புகட்டும் அடியார் பக்தியும், வேற்றுமையற்ற சமுக, சமய ஒருமைப் பாட்டியல்பும் ஆதியவற்றைக் கண்டு சைவமக்கள் யாவரும் படித் துப் பயன்பெறும்பொருட்டுப் பெரியபுராணத்தை வசன ரூபமாகச் செய்து பரிதாபி ஹு சித்திரை மாதம் யாழ்ப்பாணம் வித்தியாநுபாலன யந்திரசாலையிலே பதிப்பித்து வெளிப்படுத்தினுர். கந்தபுராணம் மென்மை மிகுந்த இன்னேசையையுடைய சொற்களால் ஆக்கப்பட்டுச் சற்றே படித்த பொதுமக்களும் இலகுவாக விளங்கிக்கொள்ளும் தன்மையுடைய நூலா கக் காணப்பட்டதுபோன்று பெரியபுராணங் காணப்படாமையும் இந் நூலினையும் பாமர மக்களும் படித்துப் பயன்பெற வைக்கும் அவாவும் வசனரூபமாக எழுதி வெளிப்படுத்தவேண்டிய அவசியத்தை நாவலரவர்க ளுக்கு உண்டாக்கிற்று. ''பரமசிவனைத் தியானித்துத் தோத்திரம் பண்ணி மனங்கசிந்து உருக உரோமஞ் சிலிர்ப்ப ஆனந்தக்கண்ணருவி சொரிய இந்தப் பெரியபுராணத்தை அத்தியந்த ஆசையுடன் ஓதுகின்றவர்களும் கேட்கின்றவர்களும் குருலிங்க சங்கம பக்தி, பிரபஞ்ச வைராக்கியம், சிவ ஞானம் என்பவைகளைப் பெறுமாறு அறிந்து, பெற்று முத்தியை அடை வார்கள்[42] என்னும் நாவலர் பெருமான் கூற்று, பெரியபுராணம் படிப்ப

42. ஆறுமுகநாவலர், திருத்தொண்டர் பெரியபுராண வசனம் 2 ஆம் பதிப்பு, சென்னை, வித்தியாநுபாலன யந்திரசாலை (1955) பக். 6.

தற்கும் கேட்பதற்கும் அவற்றின் பயனாக முத்திப்பேற்றைப் பெறுதற்கும் உகந்த நூல் என்பதையும் இதன்மூலம் 'புராண படனம்' முத்தி வழிக்கு உயர் சாதனை என்பதையும் பொதுமக்களுணர்வில் வலியுறுத்தி நிற்கும்.

பக்திப் பனுவலாகிய பெரியபுராணத்தை ஆரம்பத்திற் பதிப்பிக்க முற்படவில்லை நாவலரவர்கள். 1843 ஆம் ஆண்டு மழவை மகாலிங்கையர் பெரியபுராணத்தைத் (திருக்குறிப்புத் தொண்டர் புராணம்வரை) பதிப்பித்திருந்தார். காஞ்சிபுரம் மகாவித்துவான் கோ. சபாபதி முதலியார் பெரிய புராணம் முழுவதையும் 1859, 1870 ஆம் ஆண்டுகளிற் பதிப்பித்தார். இவர்களுக்குப் பிற்பாடு 1870 ஆம் ஆண்டையொட்டிப் பெரியபுராணத்தைப் பதிப்பிக்கவேண்டுமென்ற எண்ணம் நாவலரவர்களுக்குத் தோன்றியது. இதனாலே 1873 ஆம் ஆண்டு நாவலர் பெரியபுராணத்தைப் பதிப்பித்தார் என்பர்.[43] இக்கூற்று ஆய்வுக்குரியதொன்றாகும். ந. க. சதாசிவம் பிள்ளை அவர்கள், நாவலரவர்களின் மூலப்பிரதிகளைக்கொண்டு பெரியபுராணத்தைச் சென்னபட்டணம் வித்தியாநுபாலன யந்திரசாலையிலே 1884ஆம் ஆண்டு சர்வதாரி ஞு புரட்டாதி மாதம் பதிப்பித்து வெளிப்படுத்தினர். ஈழநாட்டவரும், திருவண்ணாமலை ஆதீனத்துத் தம்பிரானாக விளங்கியவருமான ஆறுமுகத் தம்பிரான் அவர்கள் பெரியபுராணத்தில் ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் 234 ஆம் செய்யுள்வரை உரை எழுதியுள்ளார். இந்நூல் சென்னை ஜீவரக்ஷாமிர்த அச்சுக்கூடத்திற் பார்த்திப ஞு (1885) பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. பெரியபுராணத்திற்கு எழுந்த சிறந்த உரைகளுள்ளே தம்பிரான் அவர்களின் உரையுமொன்று. இவ்வுரைப் பகுதியிற் புராண படனச் செல்வாக்கின் அமைதியை நாம் அவதானிக்கலாம். ஏழாலை பண்டிதர் மு. கந்தையா தமது ஆழமான புலமையினாலும் புராண படனத் தேர்ச்சியினாலும் பெரியபுராணத் திறவுகோலாக அரியவும் பெரியவும் என்ற நூலினை வெளியிட்டுள்ளார். புராண படனம் பக்தியை வளர்த்துச்சென்றதோடு உயரிய உரை நூல்களும் தோன்றக் காரணமாக அமைந்தது எனலாம்.

புராண படனஞ் செய்வதிற் பெரியபுராணத்தை அடுத்து முக்கியம் பெறும் நூல்கள் திருவிளையாடற் புராணமும் திருவாதவூரடிகள் புராணமும் ஆகும். திருவிளையாடற் புராணம் வருடத்தில் ஒருமாதம் வரை புராண படனஞ் செய்யப்படுவது வழமையாகும். திருவிளையாடற் புராணத்திற் கொண்ட ஈடுபாடு, மெய்யடியார் சிலரை இப்புராணத்தை முழுமையாகப் பதிப்பிக்கத் தூண்டியதுடன் வசனரூபமாக எழுதவுந் தூண்டியது. நாவலரவர்கள் மேற்குறிப்பிட்ட புராணங்களுக்கு வசனம் எழுதியதுபோன்று திருவிளையாடற் புராணத்திற்கும் வசனம் எழுதினர். இப்புராணத்திற்கு நாவலரவர்கள் எழுதிய வசனம் முற்றுப்பெறவில்லை என்பர் சிலர்.[44] நாவலரவர்கள் எழுதிய திருவிளையாடற் புராண வசனத்தை

43. வேங்கடசாமி மயிலை. சீனி., பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம், சென்னை, சாந்தி நூலகம், (1962),

44. கனகரத்தின உபாத்தியாயர், வே., ஆறுமுகநாவலர் சரித்திரம், சுன்னாகம், திருமகள் அழுத்தகம், (1969), பக். 72.

எழுதி முற்றுப்பெற வைத்தவர் நாவலரவர்களின் தமையனார் புத்திரரான த. கைலாசபிள்ளை என்பர்.[45] வேறு சிலர், நாவலரவர்கள் திருவிளையாடற் புராணத்திற்கு வசனம் எழுதி முற்றுவித்தவர் என்பர்.[46] சிலர் நாவலரவர்கள் ''கற்றோரும் மற்றோருமாகிய யாவரும் எளிதிலே பயன்பெறும் பொருட்டுக் கத்தியரூபமாகச் செய்த திருவிளையாடற்புராண வசனம், வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளையின் மாணாக்கரான சுவாமி நாத பண்டிதராற் சென்னபட்டணம் வித்தியாநுபாலன யந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டுச் சாதாரண ஞூ புரட்டாதி மீ (1910) வெளிவந்துள்ளது. தில்லைநாத நாவலரும் (1854-1939) திருவிளையாடற் புராணத்தின் ''வேதத்துக்குப் பொருளருளிச் செய்த படலத்''திற்கு அகலவுரை செய்துள்ளார். இப்புராணம் படிக்குங்கால் மக்கள் மிகுந்த பயபக்தியுடனும் தக்க ஒழுகலாற்றுடனும் கேட்டுப் பயன் பெறுவர்.

திருவாதவூரர் புராணம் வருடத்திற்கொருமுறை வாசிக்கப்படும் புராணமாகும். குறிப்பாக மார்கழித் திருவெம்பாவை உற்சவத்துடன் ஆரம்பமாகி திருவாதிரையுடன் முடியக் கூடியதாகப் படித்து முடிப்பர். இப்புராணம் ஆலயங்கள் தவிர்ந்த மடங்கள், வீடுகள், தொழிற்கூடங்கள் முதலான இடங்களிலும் வாசிக்கப்பட்டுப் பொருள் சொல்லப்பட்டு வருகின்றது. வாசிக்கும்பொழுது ''திருச்சிற்றம்பலம்'' எனச் சொல்லி, ''பவளமால் வரையில்'' எனத் தொடங்கும் காப்பினைப் பூசகர் உட்பட மூவரும் சொல்லிப் படிப்பை ஆரம்பிப்பர். ஆலயந் தவிர்ந்த ஏனைய இடங்களிலே வயதில் முதிர்ந்த தேர்ச்சி மிக்க பெரியோரைக் கொண்டும் அன்றித் தேர்ச்சி மிக்க பண்டிதர்களைக் கொண்டும் ஆரம்பித்துப் படிப்பர். இப்புராணத்தைப் பத்துநாட்கள் படிக்கக்கூடியதாகப் பகுத்துப் படிப்பர். தினசரி படிப்பினை முடிக்கும்பொழுது இறுதிப்பாட்டு வாசிக்கப்பட்டு அதற்குப் பயன் சொல்லாமலே முடிக்கப்படும். மறுநாள் அப்பாட்டினைத் தொடர்ந்து படித்த இராகத்திலோ புதிய இராகத்திலோ படிக்கலாம். இதன் கருத்து புராணப் படிப்புத் தொடர்ந்து நடக்கும் என்பதாகும். புராணப்படிப்பிற்கு வாசிப்பதற்கோ பயன் சொல்லுவதற்கோ ஆசிரியர் வராதவிடத்து, காப்பினையோதி, தொடர்ந்து படிக்கப்பட வேண்டிய பாடலை இரண்டுதரம் ஓதி இருந்தவாறே வைத்து முடிப்பர். இது எல்லாப் புராணநூற் படிப்பிற்கும் பொது விதியாகும். இப்புராணப் படிப்பின் மூன்றாம்நாள் விசேஷ சர்க்கரையமுது நைவேத்திய பூசை செய்து திருப்பெருந்துறைச் சருக்கம் படிக்கும் படிப்பின்போது, அடியவர்களுக்குப் பிரசாதம் அளிக்கப்படும். ஐந்தாம்நாட் குதிரையிட்ட சருக்கம் படிக்கும்பொழுது ''இறைவனுக்குப் பட்டுச் சாத்தும் பூசை சிறப்பாக நடைபெறும். ஆறாம்நாள் மண்சுமந்த படலம் படிக்கப்படும். அந்நாட் படிப்பினை 'பிட்டுப்படிப்பு' என்றே பொது மக்கள் அழைப்பர். இப்படிப்பின்போது நைவேத்தியமாகப் பிட்டு வைக்கப்படும். இப்படிப்பு முடிந்ததும் இந்நைவேத்தியம் அடியவர்களுக்கு அளிக்கப்படும். ஏனைய படிப்பின்போது நாட்டம் இல்லாத அடியவர்கள் இப்படிப்பின்போது தம்மையறியாது, பக்தி உணர்வு கொண்டு ஆலயம் சென்று

45. மேலது நூல், பக். 72.

46. நடராசா, எவ். எக்ஸ். ஸி., தினகரன், 1981,

அமர்ந்து பயன் கேட்பர். இச்சருக்கம் எளிமையும் இனிமையும் எல்லோராலும் மிகவும் இலகுவாக விளங்கிக்கொள்ளக்கூடிய பான்மையும் உடையதாய், வாசிப்போரினதும் பயன் சொல்வோரினதும் இரசனையும் வித்துவமும் நன்கு துலக்கப்பெறுவதாய், தம்மையறியாத பக்தி உணர்வு அடியவர் உணர்வுகளை விஞ்சி, சிறியோர் முதல் பெரியோர் வரையுள்ள எல்லாப் பொதுமக்களுக்கும் தெரிந்த சுவைமிக்க கதைவடிவினதாய் விளங்குவதால் இப்படிப்பினை விரும்பிக் கேட்டுப் பயன்பெறச் செல்லக் காரணமாக அமைந்தது எனலாம். திருவடிபெற்ற சருக்கப் படிப்பு முடிவில் கற்பூரசோதிப் பூசை நடைபெறும். முடிவில் அடியவர்களுக்குத் திருவாதிரைக் களி (பிட்டுக் களி) அளிப்பதும் மரபாகும். படிப்பினை முடிக்கின்றபொழுது இறுதிச் செய்யுளைப் படித்து முடித்ததும் மறுபடி ஒருகால் வாசித்து திருச்சிற்றம்பலம் சொல்லிக் காப்புச் செய்யுளை மூன்றுமுறை படித்து முடிக்க வேண்டும். முதல் இரண்டு தடவை காப்பினைப் படித்து முடித்ததும் மூன்றாவதாக அதன் இரண்டாவது செய்யுளைப் படித்துத் திரும்பவும் காப்பினைப் படித்து முடிப்பர். முடிக்கும்பொழுது நாட்டை, காம்போதி, மத்தியமாவதி முதலான இராகங்களிலொன்றிற் படித்து முடிப்பர். சிறப்பாக மங்கள நிகழ்ச்சியை முடிக்கும் பொழுது மத்தியமாவதி இராகத்திலே படித்து முடிப்பது சமயமரபு. அதே போன்று புராணப் படிப்பினை முடிக்கும்பொழுதும் இவ்விராகத்திலே முடிப்பது புராணப் படிப்பின் வழமையாகும். காப்பினைத் தொடக்கியவரே படிப்பினை முடித்து வைக்கவேண்டும் என்பதும் இம்மரபுகளிலொன்றாகும். இப் புராணத்தைப் படித்து முடிக்கும்போது, காப்பினைப் படித்து, "திருவாதவூரடிகள் திருவடிகள் வாழ்க, திருச்சிற்றம்பலம்" எனச் சொல்லி முடிப்பர்.

## II

ஈழநாட்டிலே மக்கள் ஆலயங்களிலே புராணங்களைப் படனஞ் செய்வதுபோன்று இராமாயணம், பாரதம் ஆகிய நூல்களைப் படித்துப் பயன் சொல்லும் வழக்கமுமுண்டு. இது இல்லங்களிலுந் தொழிலாளர் கூடங்களிலும் நடைபெற்று வந்தது. ஆலயங்களிலே இதிகாசங்கள் வாசிக்கப் படுவது பெரிதுந் தவிர்க்கப்பட்டு வந்தது. மக்கள் அதனைப் பெரிதும் விரும்பவில்லைப்போலும். இவ்வழக்காறு வடமாநிலப் பகுதிகளிலே கடைப்பிடிக்கப்பட்டதொழிய ஏனைய இடங்களிலே இம்மரபு பேணப்படவில்லை. இப்பகுதிகளிலே புராண நூல்கள் போன்று இதிகாசங்களும் புராண படன முறைக்குட்பட்டு வந்தது. சிலாபம், புத்தளம், மட்டக்களப்பு, திருக்கோணமலை முதலான பகுதிகளில் அமைந்த ஆலயங்களிலே இதிகாசங்கள் இன்றும் படிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாகப் பாரதம் இன்றும் படித்துப் பயன் சொல்லப்பட்டு வருவது குறிப்பிடத் தக்கதொன்றாகும். இங்கு புராண மரபு இருவகையில் அமைகின்றது. ஒன்று சுவாமி வீதி வலம் வரும்பொழுது ஒருவர் வாசிக்க இன்னொருவர் பயன் சொல்லி வருவார். முந்தலில் அமைந்த திரௌபதை அம்மன் ஆலயத்திலே இம் முறை பேணப்பட்டு வருகின்றது. உடப்பிலே அமைந்த மாரியம்மன் ஆலயத்திலும் பார்த்தசாரதி ஆலயத்திலும் பாரதம், புராண படன முறையிலே படித்துப் பயன் சொல்லப்பட்டு வருகின்றது. அத்துடன் பிரசங்க முறையிலும் வில்லுப்பாட்டு முறையிலும் பாரதம் விளக்கப்படுகின்றது. திருக்கோணமலை, பாண்டிருப்பு, கல்முனை, குருக்கள்மடம், திருப்பழுகாமம்,

யாழ்ப்பாணம் முதலான இடங்களிலே திரௌபதை அம்மன் ஆலயங்களும் விஷ்ணு ஆலயங்களும் அமைந்து காணப்பட்டபொழுதும் பாரதப் படிப்பின் செல்வாக்கு மிகக் குறைவே. கிருஷ்ணர் ஆலயங்களிலும் பாரதப் படிப்பு அரிதே.

வடமாகாணத்தில் வாழுஞ் சைவர்களைப் பொறுத்தமட்டில் வடமாநில மக்கள் தமது பண்பாட்டினை வளர்த்துச் செல்வதற்குக் கந்தபுராணம் எவ்வாறு முதனூலாக அமைகின்றதோ அவ்வாறே வடமேல் மாநிலத்தில் வாழும் மக்களுக்கும் பாரதம் முதன்மை வாய்ந்த நூலாக அமைகின்றது எனலாம். சிறப்பாகச் சிலாபம், புத்தளம் முதலான மாவட்டங்களில் வாழுஞ் சைவ மககள் அனைவரினதும் வாழ்க்கை முறையில் இதன் செல்வாக்கை அவதானிக்க முடிகின்றது. பெரும்பாலான மக்கள் தங்கள் வீடுகளிலே ஏட்டுப் பிரதிகளையோ கொப்பிகளையோ பெட்டகங்களிலே வைத்துப் போற்றி வருவது இங்கு குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே பாரதம் பிறிதோர் வகையான முறையிலே செல்வாக்கைச் செலுத்தியது. பாரதம் மடங்களிலும் வீடுகளிலும் தொழிற்கூடங்களிலும் வாசிக்கப்பட்டது. மடங்களிலே ஓரளவு புராண படன முறை கைக்கொள்ளப்பட்டது. வீடுகளிலே பாரதம் வசனரூபமாக வாசிக்கப்பட்டதாகவே அறிய முடிகின்றது. இப்படிப்பே பொதுமக்களின் உள்ளங்களைப் பெரிதும் பண்படுத்தினது எனலாம். ஒருவகையில் ஈழத்துச் சைவமக்களின் பண்பாட்டு வளர்ச்சியிற் பாரதம் முக்கிய இடத்தினைப் பெற்று வரலாற்றிலே ஒரு பகுதியாகவும் அமைந்து விடுகின்றது. நாவலரவர்களாலேதான் பாரதம் (வில்லிபுத்தூரார்) முதன்முதற் பிழையறப் பதிக்கப்பட்டதென்பது இங்கு மனங்கொள்ளத்தக்கதாகும்.

இராமாயணம் என்னுங் காப்பியப் படிப்பு ஆலயங்களிலும் இல்லங்களிலும் தொழிற்கூடங்களிலும் நடைபெற்றுவந்தது. தொழிற்கூடங்களிலே தொழிலாளர் ஒருமித்து, படிப்போரையும் பொருள் சொல்வோரையும் அழைத்து அவர்களைக்கொண்டு காப்பியத்தை வாசிப்பித்துக் கேட்டுக்கொண்டு தமது தொழில்களைச் செய்து வந்தனர். காப்பியத்தை வாசிப்போருக்கும் விரிப்போருக்கும் தமது உழைப்பிலிருந்து சிறிய ஊதியத்தை வழங்கினர். அது பணமாகவோ பண்டமாகவோ அமைந்திருந்தது. உதாரணமாகச் சுருட்டுத் தொழிலாளிகள் சுருட்டுக்கட்டையே வழங்கினர். இத்தகைய நடைமுறை பாரதப் படிப்பிற்கும் பொருந்துவதாகும். யாழ்ப்பாணத்து விவசாயப் பெருங்குடி மக்கள் தமது சிறுதானியங்களைச் சூடு அடிக்கும் பொருட்டு, மாரிகாலத்தையொட்டிக் (ஐப்பசி – மார்கழி) களப்பாய் இழைப்பிப்பது வழக்கம். அவ்வாறான வேலைகளிலே இழைப்போருக்குச் சோம்பல், சோர்வு, மனக் களைப்பு ஏற்படாவண்ணம் இருக்கும் பொருட்டு ஷெ காப்பியங்களையும் புராணங்களையும் வசனரூபமாகவும் பாட்டும் பயனுமாகவும் வீடுகளிலே விளக்குகின்ற மரபும் வளர்ந்து வந்தது. அப்பொழுது புராண படனகாரர்களுக்குத் தானியங்கள் உபகாரமாக அளிக்கப்பட்டன. தொழிற்கூடங்களிலும் சிறப்பாக வீடுகளிலும் படிக்கும் புராண படனமும் புராண படனமாதிரியான காவியப் படிப்பும் பெண்

பாலார்க்குக் கல்வி புகட்டும் பள்ளிகளாகவே அமைந்திருந்தன. அரிச்சுவடி எழுத்தைத்தானும் அறிந்திராத பெண்பாலோர் புராண, காவிய நூல்களின் கதை மரபுகளையும் அவற்றின் தத்துவார்த்த உண்மைகளையும் பெரிதும் அறிந்திருந்தனர். இவையே அவர்கள் தம் இல்வாழ்க்கையை இனிதே நடத்திச் செல்வதற்கும் ஆன்மீக உணர்வினைப் பெற்று உயரிய நல்வாழ்வு பெறுதற்குங் காரணங்களாக அமைந்திருந்தன எனலாம்.

ஈழநாட்டின் பிரதானமான ஆலயச்சூழல்கள் சிலவற்றிலே இராமாயணப் படிப்பு (கம்பராமாயணம்) நடைபெற்றுவந்தது. வண்ணை, வைத்தீஸ்வர ஆலயச்சூழலிலே கந்தபுராணப் படிப்புடன் இராமாயணப் படிப்பும் இடம் பெற்று வந்தது. 19 ஆம் நூற்றுண்டிலும் 20 ஆம் நூற்றுண்டின் முதற்காற் பகுதியிலும் கம்பராமாயணப் படிப்பு கவிரசனையோடும் வித்துவச் செருக்கோடும் நடைபெற்றுவந்தது. வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்களால் 19 ஆம் நூற்றுண்டின் பிற்கூற்றில் இராமாயணப் படிப்பு வளர்ந்துவந்தது. நாவலரவர்களுக்குப் பெரியபுராணம் போல; பொன்னம்பலபிள்ளைக்குக் கம்பராமாயணம் நரம்புத் துவாரங்களிலும் ஊறிக்கிடந்தது என்பர்.[47] வித்துவசிரோமணிக்குப் பிற்பாடு இராமாயணப் படிப்பு மெல்லமெல்லத் தளர்வதாயிற்று. அவரது மாணவ பரம்பரையினர் அவர்க்குப்பின் இப்படிப்பிற் சற்றே ஈடுபாடு காட்டியதன் விளைவாக அவ்வப்போது வீடுகளிலே இராமாயணப் படிப்பு நிகழ்ந்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

## III

கதை வாசித்தல் என்பது புராண படன விதிமுறைகளில் நின்றும் சற்றே வேறுபட்டது. இங்கு என்ன இராகத்திலே வாசிக்கவேண்டுமென்ற கட்டுப்பாடில்லை. ஆனுல், தெளிவாகச் சற்று இராகத்தோடு, கேட்போருக்கு இன்பம் பயப்பதாகவும் பக்தி உணர்வினையூட்டக்கூடியதாகவும் படித்தல் அவசியமானதாகும். இதனுற் சிலர் கதையை வாசிக்கும்போது இராகமாலிகையிலும் வாசிப்பர். சித்திரபுத்திரனுர் கதை சித்திரை மாதத்தில் வரும் பௌர்ணமி தினத்திலே படிக்கப்படும். இக்கதை சிறிய ஆலயங்களிலே பெரிதும் படிக்கப்பட்டுவருகின்றது. நாச்சிமார், பிடாரி, வைரவர், மாரியம்மன், முருகன், பிள்ளையார், காளி, அம்மன் முதலான தெய்வங்கள் உறையும் ஆலயங்களிலே படிக்கப்படுகின்றது. சிறப்பாக ஆகம விதிமுறைகள் பெரிதும் பேணப்படாத ஆலயங்களிலே இப்படிப்புச் சிறப்பாகப் பேணப்பட்டுவருகிறது. ஈழநாட்டிலே சிறப்பாகத் தீவுப் பகுதியிலும் மற்றும் புலோலி, சாவகச்சேரி, பருத்தித்துறை, ஏழாலை, சண்டிலிப்பாய், அளவெட்டி முதலான பகுதிகளிலும் வன்னிப் பிரதேசத்திலும் சித்திரபுத்திரனுர் கதை படிக்கப்படுகின்றது. சிவாசாரியர் ஆலயபூசையுடன் கும்பம் வைத்துப் படிப்பினை ஆரம்பித்துவைப்பார். சித்திரபுத்திரனுருக்கு ஏடு தொடக்கப்பட்டதும் படிப்பும் கதையின் வேகமும் உயர்நிலை அடையும். ஆலயங்களைச் சுற்றி வாழ்கின்ற மக்கள் கூட்டங்கூட்டமாக,

---

47. கணபதிப்பிள்ளை, சி., கந்தபுராண கலாசாரம், (1909), பக். 30.

காணிக்கைப் பொருட்களுடன் ஆலயத்தை அடைவர். இக்காணிக்கை பிர தேசங்களுக்கேற்ப வேறுபடும். தீவுப் பகுதியிலே தானியங்களாகவும், காய் கறிப் பொருட்களாகவும், உலோகப் பொருட்களாகவும், ஒடியல், தேங் காய் முதலான பொருட்களாகவும் காணிக்கைப் பொருட்கள் அமையும். நாட்டுப் புறங்களிலே வாழைக்குலை, பலகாரவகை என்ற வகையிலே அமை யும். தீவுப் பகுதியிலே காணிக்கைகள் கும்பத்தின் மேலேயும் அருகேயுங் கொட்டப்படும். நாட்டுப்புறங்களிலே காணிக்கைப் பொருட்கள் மடைக ளாகவே படைக்கப்படும். தீவுப் பகுதியிலே ஆலயங்களுக்கு அளிக்கப்படும் பொருட்கள் அனைத்தும் ஆலயத்திற்கே சொந்தமென்ற நோக்கிலே மக் களால் அளிக்கப்படுகின்றன.

கும்பம் வைத்துப் படிப்பு ஆரம்பித்தவுடன் பொங்கற் பானையும் கஞ்சிப் பானைகளும் ஏற்றப்படும். பறை முழங்க இவை அடுப்பிலே ஏற்றப் படும். இவை பெரிதும் கிராமிய வழிபாட்டின்பாற்பட்டமையால் படிப்பைக் கேட்பதற்கும் தாமும் வாசிப்பதற்காகவும் ஆலயத்தைச் சூழ்ந்து மக்கள் நிற்பர். சந்நிதி விரோதமின்றியும் சமுதாய விரோதமின்றியும் இப்படிப்பு நடைபெறும். கட்டுப்பாடான விதிமுறை இன்மையால் அடியவர்கள் ஒருவர்முந்தி ஒருவராக வாசிக்க முனைந்து நிற்பர். மக்கள் தாம் கதையைக் கேட்டு லௌகீகப் பயன் பெறுவதோடு அமையாது, வாசிப்பதன்மூலம் தமது ஆன்மீக உணர்ச்சியை உயர்த்திக் கொள்ளவும் சித்திரைக் கதைப் படிப்பு மக்களுக்கு வாய்ப்பளிக்கின்றது. கதையின் முடிவினை, படித்த பெருமகனே சிவாசாரியரோ முடித்து வைப்பர். பிற்பாடு கஞ்சி வார்ப்பும் பொங்கல் வழங்கலும். இதனாலே இப்படிப்பினைச் சித் திரைக் கஞ்சிப் படிப்பு என்று அழைத்தனர்போலும். சித்திரைப் படிப்பு, சித்திரபுத்திரனார் கதை வாசிப்பு என்னும் காரணப் பெயர்களும் இக் கதை வாசிப்பிற்கு உண்டு. ஈழநாட்டிலே எல்லோரும் பங்குபற்றிப் பயன் பெறும் படிப்பாகவும் விழாவாகவும் விளங்குவது சித்திரபுத்திரனார் படிப்பேயாகும், என்றால் மிகையாகாது.

பிள்ளையார் கதை அல்லது பெருங்கதைப் படிப்பு, திருக்கார்த்திகைக்கு அடுத்து வரும் பிரதமைதொடக்கம் மார்கழி விநாயகஷஷ்டிவரை உள்ள இருபத்தொரு நாட்களும் படிக்கப்படும். சிவாசாரியர் அல்லது தகுதி யான மற்றொருவர் ஆரம்பித்து வைப்பார். எல்லா நாட்களுங் கதை படிப்பதில்லை. ஆரம்பம்தொடக்கம் இருபதாம் நாள்வரை கதையின் காப் புச் செய்யுளையே தோடி இராகத்திற் படித்துப் புத்தகத்தைப் பீடத்தில் வைப்பர். விநாயகஷஷ்டி அன்றே முழுக்கதையும் படிக்கப்படும். மக்கள் நோன்பிருந்து ஒவ்வொரு நாளும் ஒவ்வோர் அமுது படைத்துக் காப் பினைக் கேட்டு இறைவனைத் தரிசித்துச் செல்வர். இறுதிநாள் விநாயக ருக்கு இருபத்தொரு வகை அமுது படைத்து விரதமிருந்து பெருங்கதை வாசிப்பதிலுங் கேட்பதிலும் கரிசனையுடையவர்களாக இருப்பர். இந் நோன்பினைப் பிள்ளையார் நோன்பு என்றும் பெருங்கதை நோன்பென்றும் அழைப்பர். பெருங்கதைப் படிப்பு, தோடி இராகத்திலோ இராக மாலிகையிலோ நடைபெறுவது வழமை. பொதுவாக இப்படிப்புப் பொது மக்களைப் பெரிதும் ஈர்ப்பதனால் மக்களின் ஆன்மீக ஈடுபாட்டை அவர்களை அறியாது வழிப்படுத்துவதில் அது ஒரு சக்தி வாய்ந்த சாதனமாக விளங்கு கின்றது எனலாம்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வன்னி ஆகிய பிரதேசங்களிலே சிலப்பதிகாரக் காப்பியத்தை அடிப்படையாகக் கொண்ட கண்ணகி காதை கண்ணகி ஆலயங்களிற் படிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணப் பிரதேசத்திலே இக்காதை கோவலனார் காதை (1962) என்றும், மட்டக்களப்புக் பகுதியிலே கண்ணகி வழக்குரை காவியம் (1968) என்றும், வன்னிப் பகுதியிலே சிலம்பு கூறல் என்றும் அழைக்கப்படுகின்றது. நாவலரவர்கள் ஆகம மரபினையும் சைவசித்தாந்தத்தையும் காக்க முற்பட்டதன்பேரில் மேற்கொண்ட பிரயத்தனத்தினால் நாட்டார் வழக்கியலின் அடிப்படையிற் பேணப்பட்டுவந்த கண்ணகி வழிபாடு முதலான வழிபாட்டு மரபுகளும் அவை சார்ந்த இலக்கியங்களும் வழக்கொழிந்தன. 19 ஆம் நூற்றாண்டுக்கு முன்பு ஈழநாடெங்கிலும் முதன்மை பெற்றிருந்த வீரசக்தியாகிய கண்ணகி வழிபாடு, பின்னர் மருவி, புவனேஸ்வரி, இராசராசேஸ்வரி, மனோன்மணி முதலான நாமங்களைப் பெற்று, ஆகம நெறிக்குட்பட்டு விட்டது. யாழ்ப்பாண மாவட்டத்திலே அங்கொணாக்கடவைக் கண்ணகி ஆலயத்திலேமாத்திரம் இன்றும் வைகாசி விசாகத்தின்பொழுது கோவலனார் காதை படிக்கப்படுகின்றது. ஏனைய இடங்களிலே கண்ணகி அம்மையாரே பெருந்தெய்வமாக, காக்குங் கடவுளாக விளங்கி வருகின்றாள். கண்ணகி அம்மைக்கு வைகாசி விசாகத்தின்போது பெரும் பொங்கல்விழா நடத்தி வாழ்த்தி வணங்கி வருகின்றனர். இப்பொங்கலுக்கு முதல் ஏழு நாட்களுக்கு முன்பு ஆலயங்களுக்கு விளக்கேற்றிச் சிலம்பு கூறலையும், கண்ணகி வழக்குரை காதையையும் படித்துவருவர். ஆனால் இக்காதை படிக்கும்பொழுது, புராண படன வரம்புகளே பெரிதும் பேணப்படுகின்றன. வன்னி, மட்டக்களப்புப் பிரதேசக் கண்ணகி ஆலயங்களின் பூசகர்களாக விளங்குபவர்கள் பூசாரிகளேயாவர். அவர்களே காதைப் படிப்பினை ஆரம்பித்து வைப்பர். ஒருவர் வாசிக்க மற்றவர் பயன் சொல்லும் முறை இங்கு பேணப்படுவதில்லை. பாட்டினைத் தோடி, காம்போதி, நாட்டை அல்லது இராகமாலிகையிற் படித்து முடிப்பது வழக்கம். யாழ்ப்பாணப் பகுதியிலே காப்புக்கட்டி விரதமிருந்து புராணப் படிப்புக் கேட்பதுபோன்று, இப்பிரதேசங்களிலே, குறிப்பாக மட்டக்களப்பிலே வீட்டிற்குச் செல்லாது நோன்பிருந்து காவியப் படிப்பினைக் கேட்கும் மரபு பேணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். மட்டக்களப்பு, வன்னி மாநிலங்களிலே கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம் முதலான புராணங்கள் படிக்கப்பட்டு வருகின்றபொழுதும் கண்ணகி காதைப் படிப்பிற்குள்ள செல்வாக்கு ஏனைய புராணப் படிப்பிற்கு இல்லையென்றே சொல்லவேண்டும். கண்ணகி காப்பியமாகிய சிலப்பதிகாரம் பொதுமக்கள் காப்பியமாக விளங்குவதுபோன்று, மேற்காட்டிய பிரதேசங்களிற் கண்ணகி காதை பொதுமக்கள் புராணமாக விளங்கி, மக்கள் மத்தியில் சைவத்தின் பெருமையினையும் ஆன்மீக ஈடுபாட்டினையும் வளர்த்து வருகின்றது எனலாம்.

கஞ்சனை அம்மானை என்னும் நூற்படிப்பு மட்டக்களப்பு மாநிலத்திற்கே சொந்தமானதாகும். ஈழநாட்டிலே விஷ்ணு ஆலயங்கள் நிறைந்து காணப்படும் பிரதேசமாகவும் இம்மாநிலம் விளங்குகின்றது. வந்தாறுமூலை, திமிலதீவு, களுதாவளை, குருக்கள்மடம், கல்லடி, காரைதீவு, பழுகாமம், தம்பிலுவில் முதலான இடங்களிலே அமைந்த விஷ்ணு ஆலயங்

களே இப்பிரதேசத்தின் பிரதான விஷ்ணு ஆலயங்களாகும். இவ்வாலயங்களிலே சிறப்பாகக் கஞ்சனே அம்மானை படிக்கப்படுகின்றது. வைகாசி மாதத்தில் வரும் திருவோண நட்சத்திரத்தில் விஷ்ணு பிறந்தார் என்பது புராணமரபு. அன்றைய தினத்திலே இவ்வாலயங்களிலும் பிற விஷ்ணு ஆலயங்களிலும் ஆலயச் சடங்குகள் ஆரம்பிக்கப்படுகின்றன. இதனைக் கிருஷ்ணஜயந்திச் சடங்கு என்பர். இவ்வாலயத் தொடக்க விழாவினைக் கதவு திறத்தல் என்பர். பொதுவாக மட்டக்களப்பு ஆலயங்களின் உற்சவ ஆரம்ப விழாவைக் கதவு திறத்தல் என்பது பொதுவழக்காகும். விஷ்ணு கோயில்களின் இறுதிநாட் சடங்கைக் கலியாணச் சடங்கு என்பர். கதவு திறத்தல்முதல் கலியாணச் சடங்குவரை கஞ்சனே அம்மானைப் படிப்பு நடைபெறும். கஞ்சனே அம்மானை ஏட்டுப் பிரதிகளையே கோயில்களிலே பயன்படுத்துவர். உற்சவ காலத்திற் படிக்கும்போது ஏட்டுப் பெட்டியில் இருந்து ஏட்டினை எடுத்துவைத்தே படிப்பை ஆரம்பிப்பர். இங்கு விழா பதினொரு நாட்கள் நடைபெறும். ஏட்டுப்பெட்டியின் அருகிற் பெருமடையொன்று பரப்பப்பட்டிருக்கும். இது காத்தற் கடவுளுக்கு அளிக்கப்படும் மடைபோலும். திமிலதீவுப் பகுதியில் மாங்கனி பறித்தல் என்னும் நிகழ்ச்சியோடு படிப்பு ஆரம்பமாகும். வேட்டைத் திருவிழாவுடன் படிப்பு நிறுத்தப்படும். பின்னர் எட்டு நாட்களுக்குக் கஞ்சனே அம்மானையிலுள்ள முக்கிய சம்பவங்களை நடித்துக் காண்பிப்பர். இறுதிநாள் கலியாணச் சடங்கு விமரிசையாக நடைபெறும். இச்சடங்கினைக் கலியாணப் படிப்பு என்றும் அழைப்பர். அன்றிரவு கஞ்சனே அம்மானைப் பாடலிலுள்ள உருக்குமணி கிருஷ்ண திருக்கலியாணப் பகுதி படிக்கப்படுவதால் இந்நிகழ்ச்சி கலியாணப் படிப்பு என்ற பெயரைப் பெற்றதென்பர். மட்டக்களப்பின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து மக்கள் ஆலயத்தினைத் தரிசித்தும் படிப்பினைக் கேட்டும் கூத்தினைப் பார்த்தும் பயன்பெற்றுச் செல்வர்.[48]

மேற்கூறிய சித்திரபுத்திரனர் கதை, பிள்ளையார் கதை, கண்ணகி காதை (கோவலனர் கதை), கஞ்சனே அம்மானை, பெரியதம்பிரான் கதை முதலான சமயக் கதைப் படிப்புகள் அனைத்தும் கற்றோரின் ஆளுமைக் குட்படும் வித்துவப் போட்டியிற் சிக்குண்டு தவிப்புறாது விளங்குவதாற் பொதுமக்கள் இவற்றைத் தாமே வாசித்தும் விரும்பிக் கேட்டும் பயன் பெறுவதால் இவற்றினைப் ''பொதுமக்கள் புராணப் படிப்பு நூல்கள்'' என்று குறிப்பிடுவதன்மூலம் இவற்றின் சமய, சமுதாய முக்கியத்துவத்தினை விளக்கிச் செல்லலாம்.

## IV

ஈழநாட்டிலே வளர்ச்சி பெற்ற புராண படன முறையானது பண்டைக் காலந்தொட்டு உயர்நிலை பெற்று வந்ததென்று சொல்லுவதற்கில்லை. காலந்தோறும் ஏற்பட்ட அரசியல், சமுதாய, சமய சிந்தனைக்கேற்ப இப்புராண படனத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் நிகழ்ந்திருந்ததெனலாம். எனவே இதன் வரலாற்றுப் போக்கினை இங்கு சுருக்கமாக ஆராய்தல் அவசியமானதாகும்.

---

48. வித்தியானந்தன், சு., (பதிப்பு) கஞ்சனே அம்மானை,

ஈழநாட்டிலுந் தமிழ்நாட்டிலும் புராணப் படிப்பு முறை சோழப் பெருமன்னர் ஆட்சிக் காலத்திலிருந்து வளர்ச்சி பெற்றது என்பதை மறுப்பதற்கில்லை. சோழர் காலத்திலே ஈழநாட்டிலே ஆரம்பித்த புராணப் படிப்பு முறை ஆரியச்சக்கரவர்த்தி காலத்திலே நன்கு பேணப்பட்டு வந்தமைபற்றி முன்னர்க் குறிப்பிடப்பட்டது. ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்திலே தக்கிணகைலாச புராணம், திருக்கோணசல புராணம் முதலான புராணங்கள் எழுந்தன. இவை இங்கு புராணப் படிப்பு நன்கு பேணப்பட்டதன் செல்வாக்கின் விளைவாகவே தோன்றின எனலாம். ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்திற்குப் பிற்பாடு, ஈ ழ நா டு ஐரோப்பியர்வசம் ஆகியது. ஐரோப்பியர் ஆட்சிக் காலத்திலே ஈழநாட்டின் புராதன மரபுகள் வழக்கிழந்தன. குறிப்பாகக் கலாசாரமும் சமயமும் வீழ்ச்சி அடையவே செய்தன. போர்த்துக்கேயரின் ஆட்சியின்போது *(1521 – 1658)* அவர்களின் ஆதிக்கவலுவும் கத்தோலிக்க மதவெறியும் சைவம் போன்ற ஈழநாட்டின் சுதேசிய மதங்களைப் பெட்டிப்பாம்பாக அமரச் செய்தன. சைவம் மக்களின் உள்ளத்திலே உறைந்துகிடந்தது. விழிப்புணர்ச்சி என்ற வார்த்தைக்கே இடமிருக்கவில்லை. போர்த்துக்கேயரை அடுத்து ஈழநாட்டைக் கைப்பற்றிய ஒல்லாந்தர் ஆட்சியில் *(1658 – 1796)* ஓரளவு சமயத்துறையில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை பேணப்பட்டது.[49] இவர்கள் காலத்திலே சைவக் கோயில்கள் ஆங்காங்கே தோன்றின. நித்திய பூசைகளும் விரதங்களுங் கடைப்பிடிக்கப்பட்டன. எனவே கோயில்களிலே புராணங்கள் படிக்கப்பட்டன. புராணங்களுங் கதைநூல்களும் எழுதப்பட்டன. இக்காலப்பகுதியிற் சுன்னுகம், மாதகல், காரைதீவு (காரைநகர்), தெல்லிப்பழை, அராலி, நல்லூர், வட்டுக்கோட்டை, அச்சுவேலி, இணுவில், மாவிட்டபுரம், திருக்கோணமலை முதலான இடங்களிலே ஆலயங்கள் புதிதாகத் தோன்றியதுடன் கிலமாகிய ஆலயங்கள் புனருத்தாரணம் செய்யவும்பட்டன. அவ்விடங்களிலே புராணங்களும், கதைநூல்களும் படிக்கப்பட்டன. கூழங்கைத்தம்பிரான் *(1699 – 1795)*, நெல்லைநாதர், மயில்வாகனப் புலவர் *(1716 – 1780)*, வரதபண்டிதர் *(1656 – 1716)*, வீரக்கோன் முதலியார் *( ? – 1686)*, இராமலிங்க முனிவர் *(1649 – ? )*, கணபதி ஐயர் *(1709 – 1803)*, சு. நமச்சிவாயப்புலவர் *(1749 – ? )*, இணுவை சின்னத்தம்பிப் புலவர், மாவிட்டபுரம் சின்னக்குட்டிப் புலவர் *( ? – 1815)* முதலான புலவர் இக்காலப் பகுதியிற் பெரும் புலவர்களாக விளங்கினர். இவர்களிற் பெரும்பான்மையோர் கூழங்கைத்தம்பிரானிடம் திண்ணைப்பள்ளி முறையிற் பாடங் கேட்டவர்கள். ஓர் கூட்டுக் கல்வி முறையும் காலதேவையும் இக்காலப் பகுதியிற் புராணப் படிப்பின் அவசியத்தை வலியுறுத்தின. சின்னத்தம்பிப் புலவர் இக்காலப் பகுதியில் வாழ்ந்தவர் எனக் கொள்ளுமிடத்து புராண, இதிகாசப் படிப்பு இக்காலத்தில் முக்கியம் பெற்றிருந்தது எனலாம். இவர் இதிகாச புராணங்களுக்கு உரைசொல்லுவதில் மிக்க தேர்ச்சியுடையவராக விளங்கினர்.[50] ஆட்சி

---

49. சதாசிவம், ஆ., (தொகுப்பு) ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், சாகித்திய மண்டல வெளியீடு *(1966)* பக். *93*.

50. பூலோகசிங்கம், பொ., (பதிப்பு) பாவலர் சரித்திர தீபம், 2 ஆம் பதிப்பு பக். *233*.

யாளரின் சமயநோக்குப் பரந்துபட்டதாக அமையாதவிடத்தும், சமயப் போட்டிகளுக்கு இடமில்லாதவிடத்தும் இப்புராண படன முறை தன்னளவில் இடம்பெற்று வந்தது என்றே கூறுதல் வேண்டும். ஒருவகையில் இக்காலப் பகுதியிற் புராண படன முறை உடைப்பெடுக்க அரம்பித்ததெனலாம்.

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலம் (1796 – 1947) ஈழநாட்டின் வரலாற்றிலே நிலைமாறு காலமாக அமைவதை நாம் அவதானிக்கலாம். ஈழநாட்டின் சமூக, பொருளாதார அமைப்புக்களிற் பெரிதும் மாற்றமேற்பட்டுச் சமய மாற்றம் வற்புறுத்தப்பட்டது. கலாசார மாற்றம் வேண்டப்பட்டது. ஆங்கிலக் கல்வியும், அறிவியல் துறையும் வளர்ச்சி கண்டன. சமய கலாசார உந்தல்கள் ஈழநாட்டின் சுதேசிய சமயவாதிகளைச் சிந்திக்கத் தூண்டின. ஆங்கிலேயர், சுதேசிய சமய கலாசார மாற்றத்தின்பொருட்டுப் பரிசுத்த ஆவி புகப்பண்ண மேலைநாடுகளிலிருந்து சேர்ச் மிஷன் (1818) முதலான மிஷனரிமார்களின் வருகையை அனுமதித்தனர். இவர்கள் ஈழநாட்டிற் காணப்பட்ட சமூகக் குறைபாடுகளையுங் கல்வி முறைகளையுங் கண்டித்தனர். சமூகத்திடையே சமன்பாட்டை ஏற்படுத்த விழைந்தனர். ஆங்கிலக் கல்வியைப் புகட்டினர். உத்தியோக வாய்ப்புக்களை அளித்தனர். அச்சியந்திரத்தை நிறுவினர். சமய கண்டனம், துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டனர். உதயதாரகை (1841) கத்தோலிக்க பாதுகாவலன் (186?) முதலான பத்திரிகைகளை ஏற்படுத்தினர். இவை அனைத்தையும் தமது சமயப் பண்பாட்டின் நிலைபேற்றுக்காகச் செய்யத் தலைப்பட்டனர். இத்தகைய மிஷனரிமார்களின் தீவிர பிரசார வேகம் ஈழத்துச் சுதேசிய மக்களைக் குறிப்பாகச் சைவ, பௌத்த மக்களைச் சிந்திக்கத் தூண்டிற்று. ஈழநாட்டின் வடபகுதியிலே நாவலரவர்களும் (1822 – 1879), தென்பகுதியிலே மொகொத்திவக்குணனந்ததேரரும் (1833 – 1890) மிஷனரிமார்களின் சமய நடவடிக்கைகளுக்கும் ஆங்கிலேயரின் சமயக் கொள்கைக்கும் மாறுகப் பிரசாரஞ் செய்யத் தலைப்பட்டனர். நாவலரவர்கள் யாழ்ப்பாணத்திலே நல்லூரிலே செல்வவளமுள்ள குடும்பத்திற் பிறந்தவர். தமிழ் மொழிக் கல்வியும் ஆங்கிலக் கல்வியும் நிரம்பப் பெற்றவர். வாழ்க்கைக்குப் போதுமான வளத்தைத் தரக்கூடிய பதவியை வகித்தவர். பல உயர்பதவிகள் அவரை வேண்டிநின்றபொழுதும் சைவத்தின் கீழ்நிலை கண்டு தமது சுகபோகங்களைத் துறந்தவர். நாவலரவர்கள் (1864) வெளியிட்ட விக்கியாபனமொன்றிலே தமது நோக்கினைப் பின்வருமாறு குறிப்பிட்டார்.[51]

> ''கன்னியை நாயகனிடம் ஒரு துட்டாயினும் வாங்காது வீடு விளைநிலம் தோட்டம் ஆபரணம் முதலியவற்ருேடு விவாகஞ் செய்து கொடுக்கும் வழக்கமுடையது என் சென்ம தேசமாகவும் நான் இல்வாழ்க்கையிற் புகவில்லை. இவைகளெல்லாவற்றுக்குங் காரணம் சைவத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசையேயாம்''

51. ஆறுமுகநாவலர் சரித்திரம், (1968) பக். 95.

நாவலரவர்கள் தமது நோக்கினை நிறைவேற்றும்பொருட்டுத் தனது வாழ்வினைத் துறந்தார். மரபுவழிச் சிந்தனையையும் நவீன மாற்றங்களையுங் கருத்திற்கொண்டு சைவத்தின் வளர்ச்சியின்பொருட்டுக் கல்வி நிறுவனங்கள் சைவவித்தியாநுபாலன அச்சியந்திரசாலை, சைவநூல் ஆக்கம், சைவசமயத் துண்டுப் பிரசுரங்கள், புராண படனம் செய்தல் முதலான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்துச் சைவசமயத்தைத் தமிழ் நாட்டிலும், சிறப்பாக ஈழநாட்டிலும் நிலைப்படுத்தினர். நாவலரவர்கள் தமது சமய முயற்சிகளை (1) நிறுவன அடிப்படையிலும் (2) பிரசார அடிப்படையிலும் மேற்கொண்டு வெற்றி பெற்றார். பிரசார அடிப்படையில் அவர் மேற்கொண்ட புராண படன முறையினை இங்கு தனித்து நோக்குதல் அவசியமானதாகும்.

புராண படன முறை ஆரியச்சக்கரவர்த்திகள் காலம்முதல் ஆங்கிலேயர் ஆட்சிக்காலம்வரையும் மக்கள் மத்தியில் நிகழ்ந்தது. அதை ஆலயங்களிற் கேட்டுப் பயன் பெறவேண்டும் என்ற நோக்கமே மேலோங்கிற்று. அதை வேண்டும்பொழுதெல்லாம் வீடுகளிலும் புனித வைபவங்களிலும் குருபூசைத் தினங்களிலும் படித்துப் பயன் பெறலாம் என்ற நம்பிக்கை இருக்கவில்லை. வீடுகளிலே வாசித்துப் பயன் பெறுவதற்குப் பாரதம், இராமாயணம் ஆகிய இருகாப்பியங்களையும் பிற நூல்களையுங் கொண்டிருந்தனர். இத்தகைய நிலையிலே நாவலரவர்கள் புராண படன முறையைக் கிறிஸ்தவ மிஷனரிமார்களின் பிரசாரத்திற்கு எதிரான பிரசாரக் கருவியாக்கிச் சைவமக்கள் புனித நாட்களிலே புராண படன விதிகளுக்கு அமைந்து வீடுகளிலும், புனித இடங்களிலும் வாசித்துப் பயன் சொல்லிப் பயன் பெறலாம் என்ற நிலைக்கு அதைக் கொண்டுவந்தார். சமூக ஏற்றத்தாழ்வுகள் இன்றி எல்லாச் சைவமக்களும் இம்முறையாற் பெரும் பயன் பெற்றனர்.

நாவலரவர்கள் தமது புராண படன முறையை நல்லூரிலே ஆரம்பித்தார். நல்லூர் கந்தசாமி கோயிலிலே பிராமணர்களே புராண படனஞ் செய்து வந்தனர். இன்னும் அவ்வாறே நடந்து வருகின்றது. இது பொதுவிதி. நாவலர், வித்துவசிரோமணி விடயத்திலும் இப்பொதுவிதியைக் கொள்வதற்கில்லை. இருவருக்கும் விசேட சிறப்புச் செய்தனர் என்பர்.[52]

நாவலரவர்கள் பெரியபுராணம், கந்தபுராணம் ஆகிய இரு நூல்களையும் புராண படனஞ் செய்வதில் ஈடுபாடுடையவர்களாக இருந்தபோதும் கந்தபுராண படனஞ் செய்வதிலேயே மிக்க ஈடுபாடு காட்டினர். கந்தபுராணப் படிப்பு இவர் காலத்திலே உச்சநிலை பெற்றதென்பர். நாவலரவர்களால் விளக்கப்பட்ட ரசனை, தத்துவக் குறிப்புகள் முதலானவை எழுத்து வடிவம் பெறவில்லை. ஆனால் அவ்வப்போது அவர் ஆற்றிய புராண படனத்தின் பொருள் அமைதியும் தலையங்கங்களும் சில ரசனைக் குறிப்புகளும் கேள்விவழியாகச் சுருங்கிய அளவில் எழுத்து வடிவம் பெற்றுள்ளன. அவற்றுள், கந்தசுவாமி கோயிலிலே கந்தபுராணத்திற் சூர

52. கணபதிப்பிள்ளை, சி., கந்தபுராண கலாசாரம் (1959),

னமைச்சியற் படலத்தில் வரும் ''வேதக்காட்சிக்கும் உபநிடத்து உச்சியில் விரிந்தபோதக் காட்சிக்கும் காணவன்'' என்ற பாடலுக்குச் சொல்லிய உரையும், ''ஐந்து பேரறிவுங் கண்களே கொள்ள'' என வரும் பெரிய புராணச் செய்யுளுக்குஞ் சொல்லிய உரையும் தமது நண்பர் ஆ. சுப்பிரமணியர் வீட்டிலே திருவிளையாடற் புராணத்திற்குச் சொல்லிய உரையும் வண்ணார்பண்ணைச் சிவன்கோயிலிலே கந்தபுராண படலங்களுக்குச் சொல்லிய உரையும் குறிப்பிடத்தக்கன. நாவலரவர்கள் தாம் புராண படனஞ் செய்வதோடு நின்றுவிடாது தமது மாணவ பரம்பரையினருக்கும் இம்முறையினை நன்கு பயிற்றுவித்து இக்கால கட்டத்திலே புராண படன முறை உச்சநிலை அடையச் செய்தார். இவரின் மாணவ பரம்பரையிலே வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளை (1937 - 1897), மட்டுவில் ந. வேற்பிள்ளை (1847 – 1930), வண்ணை சி. பொன்னுத்துரை ஐயர், காசிவாசி செந்திநாதையர் (1848 – 1924), மா. வைத்திலிங்கம்பிள்ளை (1852– ? ), சுழிபுரம் திருஞானசம்பந்த உபாத்தியாயர், வேலணை வி. கந்தப்பிள்ளை (1840-1914), ச. சதாசிவம்பிள்ளை ( ? -1910) நல்லூர் திருஞானசம்பந்தர், இணுவில் அம்பிகைபாகர், இணுவில் நடராசையர் ( ? –1903), விளிசிட்டி அம்பலவாண உபாத்தியாயர் முதலானோர்கள் புராண படனஞ் செய்வதிலும், வித்துவத் தகைமையிலும் கவித்துவ ஆற்றலிலுஞ் சிறந்து விளங்கினர். நாவலரவர்களின் மாணுக்கர்தவிர மானிப்பாய்ச் சுப்பையர் (1820–1898), பீதாம்பரப் புலவர் ( ? –1819), முத்துக்குமாரப் புலவர் ( ? –1827), மா. வை. பொன்னம்பலபிள்ளை ( ? –1891), புங்குடுதீவு இராமலிங்கச் சட்டம்பியார், சபாரத்தின முதலியார் (1858–1922), சதாசிவ பண்டிதர், முருகேச பண்டிதர், உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர் ( ? –1910), அம்பலவாண நாவலர் (1855–1932), சுன்னுகம் குமாரசுவாமிப் புலவர் (1855–1952), அச்சுவேலி மயில்வாகனப் புலவர் (1865–1912), உடுப்பிட்டிச் சின்னத்தம்பி (1830–1878), அளவெட்டிக் கனகசபைப் புலவர் (1829–1873) நல்லூர்ச் சந்திரசேகரபண்டிதர், திருமலை ஆறுமுகம் முதலான புலவர்கள் நாவலரவர்கள் வாழ்ந்த காலகட்டத்தில் தமது ஊர்களிலும் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்றும் புராண படனஞ் செய்து வந்தனர். 19ஆம் நூற்றுண்டிலே ஈழநாட்டிலே தோன்றிய புலவர்கள் யாவரிடத்தும் மக்கள் புராண படனஞ் செய்யும் ஆற்றலை எதிர்பார்த்தனர். புலவர்களும் வித்துவான்களும் இலக்கிய இலக்கண உரையாற்றலுள்ள ஏனைய புலவர் பெருமக்களுக்கும், பொதுமக்களுக்கும் தம் திறமையைக் காட்டுவதற்குப் புராண படன முறை வாய்ப்பான கருவியாகவும் திறமையின் அளவீடாகவும் இருந்தது. எனவே ஒருவிதத்தில், ''புராண படனஞ் செய்தல்'' என்பது அக்காலப் புலவர்களுக்கு ஒரு பாடத்திட்டமாகவே அமைந்துவிட்டது எனலாம்.

புராண படனஞ் செய்வதில் நாவலரவர்களுக்கு அடுத்து எண்ணக்கூடியவர் வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளையாகும். இவர் நாவலரவர்களின் மாணுக்கரும் மருகரும் ஆவார். புராண நூல்களுக்கு உரை சொல்லுவதில் வல்லவர்; இலக்கிய இரசனையை எடுத்துக் காட்டுவதில் ஈடும்எடுப்பும் இல்லாதவர். இவருக்குப் பயன் சொல்வதன்றி வாசிக்கின்ற வழக்கம் கிடையாது. அவர் வாசிக்கப் பயன் சொல்வோர் யாரு

மில்லை என இவரின் ஆற்றலைச் சிறப்பித்துக் குறிப்பிடுவர்.[53] இவரின் புராண படன முறை சற்று நாவலரவர்களைவிட வேறுபட்டதாய் அமைந்திருந்தது. நாவலரவர்களுக்குப் புராணங்களிலே ஈடுபாடு இருந்ததுபோல வித்துவசிரோமணிக்கும் புராணங்களிலே ஈடுபாடு இருந்தபொழுதும் கம்பராமாயணம், சீவகசிந்தாமணி, பாரதம் ஆகிய நூற்படிப்பிலே மிகுந்த ஈடுபாடும் பயிற்சியும் உடையவராகக் காணப்பட்டார். வித்துவசிரோமணி அவர்கள் இக்காவியங்களின் கருத்துக்களின் உயர்வையும் காவிய ரசனைகளின் அளவுகளையும் கற்பித்தவர்; வரிசை அறிந்தவர். புராணக் கருத்துக்களைச் சிரமேற் கொள்ளும் இந்நாட்டிலே காவியரசனைக் கருத்துக்களைத் தலைமேற் கொள்ளப் பிள்ளையவர்கள் விரும்பவில்லை.[54] என்னும் கருத்து ஈழநாட்டிலே புராணப் படிப்பானது மிகுந்த பயபக்தியுடன் மேற்கொள்ளப்பட்டு வந்தது என்பதைப் புலப்படுத்துகின்றது. ஆயினும் வித்துவசிரோமணி அவர்கள் கம்பராமாயணத்திலே சிவபரம்பொருளுக்கு இழுக்கான இடங்களை நீக்கிக் கம்பராமாயண படன வியாக்கியானங்களை வண்ணார்பண்ணை, நல்லூர், தெல்லிப்பழை, அளவெட்டி, புலோலி முதலான இடங்களிலே ஆரம்பித்து நடத்திவந்தார். ஆனால், கந்தபுராணக் காதல் கொண்ட சைவ மக்கள் கம்பராமாயணத்திற்கு மதிப்பளித்தபொழுதும் அதனைப் பின்பற்றிச் செல்ல விரும்பவில்லை. மக்கள் புராண படனஞ் சார்ந்த காவியரசனையைச் சந்நிதிவிரோதம் எனக் கருதத் தலைப்பட்டனர். இதனாலே பொன்னம்பலபிள்ளை அவர்கள் புராண படன வளர்ச்சியிலே அவர் பெற்றிருக்கவேண்டிய முக்கியத்துவத்தைப் பெறத் தவறிவிடுகின்றார். இவரின் மாணவ பரம்பரையினரால் இவர் விட்டுச் சென்ற புராண படனஞ் சார்ந்த காவியமரபு பேணப்பட்டு வந்தபொழுதும் அவை சமயச் செல்வாக்கைப் பெற்றுத் திகழவில்லை. எது எவ்வாறு இருப்பினும் புராண படன வளர்ச்சியின் போக்கில் அவரின் பங்கினைக் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை.

காவியரசனைக் குறிப்புக்களை எடுத்து விளக்குபவரில் மானிப்பாய் வ. இராமலிங்கம் என்பவரும் குறிப்பிடத்தக்கவர். இவர் கேட்போருடைய கன்னத் துவாரங்களில் அமிர்தஞ் சொரிந்ததெனப் புராண காவியங்களைக் கனிவாய் வாசிப்பதிலும் அர்த்தம் பண்ணுவதிலுந் தமக்குத் தாமே நிகரென்பர்.[55] காவியரசனைகள் புராண படன வியாக்கியானங்களுக்குமுன் ஈடுகொடுக்க முடியவில்லை. சந்நிதி விரோதங்களை மக்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இதனாலே காவியரசனைகள் ஆலயங்களினின்று விடுபட்டு, மேடையரங்கேறின. பின்னர் அவையும் அடங்கிவிட்டனபோலும்.

## V

20 ஆம் நூற்றாண்டின் முதற்காற் பகுதிக்குப் பின்னர் ஈழத்து மக்கள் தேசிய எழுச்சியையும், அதன் தாகத்தையும் வேண்டிநின்றனர்.

---

53. கணபதிப்பிள்ளை, சி., கந்தபுராணக் கலாசாரம் (1959),

54. மேலது நூல்,

55. பூலோகசிங்கம், பொ., (பதிப்பு) பாவலர் சரித்திர தீபம், (1975), பக். 178.

நான்கு நூற்றுண்டுகளுக்கு மேலாக அந்நியர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த மக்கள் பல்வகைத் துறையிலும் சுதந்திரம் வேண்டிநின்றனர். இந்நிலையிலும் தமது பாரம்பரிய கலாசாரத்தையுங் கல்வியையுஞ் சமயத்தையும் பாதுகாக்கவேண்டுமென்ற நோக்கமே அவர்களிடத்திலே மேலோங்கிநின்றது. ஆங்கிலக் கல்வியும் அதனுற் பெற்றுக்கொண்ட வசதி வாய்ப்புக்களும் ஒரு வர்க்கத்தை உயர்நிலைக்கு அழைத்துச்சென்றது. மக்கள் யாவரும் சமய வாய்ப்புக்கள் பெற்றுக்கொள்ள முடியாதநிலையில் வர்க்க முரண்பாடுகள் தலைதூக்க முற்பட்டன. இவர் முரண்பாடற்ற சமூக மேம்பாடு கருதி, சமூக, சமய வழமைகளைப் பின்பற்றக் கருதினர். இவற்றை அவதானித்த தேசியவாதிகளும், சுதேசிய பாரம்பரிய கலாசாரத்தைக் காப்பாற்ற வேண்டியதன் அவசியத்தை மக்களுக்கு வற்புறுத்தினர். இந்நிலையில் நாவலரவர்களின் மாணவ பரம்பரையாலும் பிறராலும் சைவ சமயக் கல்வியும் புராண படன முறையும் காப்பாற்றப்பட்டு வளர்க்கப்பட்டன. குறிப்பாகச் சுன்னுகம் குமாரசுவாமிப் புலவர் (1854 – 1922), புலோலி நா. கதிரவேற்பிள்ளை (1874 – 1907), புலோலி வ. குமாரசுவாமிப் புலவர் (? - 1925), புன்னுலைக்கட்டுவன் கணேசையர் (1878 – 1958), பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை (1894 – 1982), சதாசிவ ஐயர் (1882 – 1950), சு. சிவபாதசுந்தரம் (1877 – 1953), தென்கோவை பண்டிதர் ச. கந்தையாபிள்ளை ( ? – 1950), சுப்பிரமணிய சாத்திரியார் (1865–1950), நவாலி க. சோமசுந்தரப் புலவர் (1878 – 1953), வட்டுக்கோட்டை அ. கந்தையா உபாத்தியாயர், வண்ணை ஆ. சன்முகரத்தின ஐயர், அச்சுவேலி தில்லைநாதநாவலர் (1854 - 1939), வேலணை பேரம்பலப் புலவர் (1859-1935), சாவகச்சேரி க. பொன்னம்பலபிள்ளை (1876 – 1942), பருத்தித்துறை முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் (1853 – 1936), காரைதீவு நாகமுத்துப் புலவர் (1857 – 1939) முதலானோரையும் மட்டக்களப்பைச் சேர்ந்த சின்னவப்புலவர் (1877 – 1962), விஞசித்தம்பிப் புலவர் (1887–1930) முதலானோர்களையுங் குறிப்பிடலாம்.

ஈழநாடு அந்நியர் ஆட்சியினின்று சுதந்திரம் பெற்ற பின்னர், தேசியத் தலைவர்கள் தமது கல்வி, கலாசாரம், சமயம், மொழி முதலானவற்றைப் பேணவிழைந்தனர். நாட்டின் பலபாகங்களிலும் பாடசாலைகள் தோன்றின. சகல மக்களுக்கும் இலவசக் கல்வி அளிக்கப்பட்டது. சுதேச மொழிகள் தேசிய மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டன. பாடசாலைகள் எங்கும் தாய்மொழிக் கல்வியும் சமய அறிவும் புகட்டப்பட்டன. அச்சியந்திரசாலைகள் அதிகரித்தன. பத்திரிகைகள் பல சுதேசிய மொழிகளிலே வெளிவந்தன. பல ஏட்டுப் பிரதிகள் அச்சேறின. பல நூல்கள் மறுபதிப்புப் பெற்றன. உரைநூல்கள் பல தோன்றின. நூல்கள் யாவற்றையும் பொதுமக்கள் பெற்றுப் பயன் பெறும் வாய்ப்புக்கள் ஏற்பட்டன. வானொலி, ஒலிபெருக்கி, பத்திரிகை என்ற வகையிலே பொதுசனத் தொடர்பு சாதனங்கள் பெருகின. இன்றைய தொலைக்காட்சியையும் இதனுட்படுத்தலாம். இவை மக்களின் அறிவாற்றலைப் பெருக்கின. இந்நிலையில் மரபுவழிக் கல்விமுறையும் ஆசாரங்களும் தளர்வதாயின. சமுதாயத்தின் துரித முயற்சிகளும் ஆசைகளும் மனிதனது ஆன்மிக உணர்வைத் தளர்வடையச்செய்யத் தலைப்பட்டன. ஆலயங்களிலும் வீடுகளிலும் புராண படனஞ் செய்யப்படும் வழக்கம் படிப்படியாக வழக்கிழக்கத் தொடங்கிற்று.

ஆயினும் முற்முக மறைந்துவிட்டதென்று சொல்வதற்கில்லை. இன்றும் யாழ்ப்பாணம், நல்லூர், வண்ணார்பண்ணை, மல்லாகம், ஏழாலை, தெல்லிப் பழை, அளவெட்டி, மாவிட்டபுரம், கீரிமலை, பருத்தித்துறை, புலோலி, அராலி, திருக்கேதீச்சரம், திருக்கோணேசுவரம், மட்டக்களப்பு, திருக் கோயில், கொழும்பு முதலான இடங்களில் உள்ள சிவன், பிள்ளையார், விநாயகர், அம்மன் முதலான ஆலயங்களிலே புராண படனஞ் செய்யப் பெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். மற்றும் கீரிமலைச் சிருப்பர் மடம், ஏழாலை கருணாகரப்பிள்ளையார் மடம், விளிசிட்டி ஞானவைரவர் மடம், திருக்கேதீச்சரத்தில் அமைந்த மடங்கள் முதலானவற்றிலும் புராண பட னஞ் செய்யப்பெற்று வருவதும் இங்கு மனங்கொள்ளத் தக்கதாகும்.

ஈழத்து மடங்களின் சமய வளர்ச்சியிலே கீரிமலைச் சிருப்பர் மட மும், ஏழாலை நால்வர் மடமும் (கருணாகரப்பிள்ளையார் மடம்) சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. சிருப்பர் மடத்தார் புராண படனஞ் செய்வதற்கென்றே மானியங்களை அளித்துள்ளனர். அதனைக்கொண்டு மடத்தார் புராணப் படிப்பினைக் கைவிடாது காலந்தோறும் நடத்திவருகின்றனர். ஏழாலை நால்வர் மடத்தார் வைகாசி மாதத்தில் சேக்கிழார் குருபூசையுடன் பெரிய புராணப் படிப்பை ஆரம்பித்து ஆடியீற் சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை யுடன் முடிப்பர். திருவாதவூரடிகள் புராணத்தைப் பத்துநாள் முற்கொண்டு ஆரம்பித்துத் தை உத்தரத்தில் முடிப்பர். சிவராத்திரியின்பொழுது கந்த புராணத்தின் அடிமுடிதேடுபடலம் படிப்பது வழக்கம். இவை எல்லாவற் றுக்கும் மேலாக இம்மடத்திலே புராண படனப் பயிற்சி வகுப்பு நடை பெற்றுவருவது இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

20 ஆம் நூற்றாண்டின் நடுக்கூற்றிலே காலஞ்சென்ற சங்கானைக் குமாரசுவாமி, வீ. சம்பந்தர், நவாலித் தம்பையர், ஏழாலைத் தம்பையா உபாத்தியாயர், விளிசிட்டி ஆறுப்பிள்ளை, கொக்குவில் குமாரசுவாமிப் புல வர், தெல்லிப்பழை நாகலிங்கம், ஊரெழு சம்பந்தர் முதலானோர்களால் சிறப் பாகப் புராண படனஞ் செய்யப்பட்டது. சுன்னாகம் பண்டிதர் இ. நம சிவாயம், ஏழாலை மு. கந்தையா, தாவடி செ. சிவப்பிரகாசம், ஏழாலை சச்சி தானந்தம், மாவிட்டபுரம் சங்கரப்பிள்ளை, அளவெட்டிக் கதிரேசர்பிள்ளை முதலானோர்களாலும், பண்டிதைகள் துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திருமதி. சத்தியதேவி துரைசிங்கம், திருமதி. நா. பாக் கியம், திருமதி. வசந்தா வைத்தியநாதன், திருமதி. சி. பாலநாதன் மற்றும் திருமதி. இராசையா, செல்வி புஷ்பா செல்வநாயகம் போன் றோர்களாலும், ஏழாலை மு. ஞானப்பிரகாசம், அளவெட்டி விசுவநாதன், விநாசித்தம்பி, மல்லாகம் நமசிவாயம், ஏழாலை சின்னத்துரை உபாத்தி யாயர், சி. இரத்தினம், கந்தப்பசேகரம்பிள்ளை, தெல்லிப்பழை வ. குகசர்மா முதலானோர்களாலும் மற்றும் தேர்ச்சிமிக்க பிறராலும் ஆலயங்கள்தோறும் புராண படனஞ் செய்யப்பெற்று வருகின்றது. சி. இரத்தினம் என்பார் பல இராகங்களில் தேர்ச்சி மிக்கவராக விளங்குவதால் புராணங்களைப் பல இராகங்களிலும் வாசிக்கும் ஆற்றல் பெற்று விளங்குகின்றார். வாசிப்போ ரின் இராக வித்தியாசங்களே பயன் சொல்வோரையும் கேட்போரையும் பக்தியுணர்வுக்குள் அமிழ்த்திவிடுகின்றதென்பதை மறுப்பதற்கில்லை.

ஈழநாட்டிற்கே தனித்துவமுடைய புராண படன முறையினை, நாவலரவர்கள் சமயப் பிரசாரக் கருவியாகக்கொண்டு செயற்பட்டதோடு, தமது மாணவ பரம்பரையினரைக்கொண்டு இம்முறையினைத் தீவிர பிரசாரக் கருவியாகச் செயற்படுத்த முயன்றூர். இதனுலே புராண படன முறை உயர்நிலை பெற்றது. 19 ஆம் நூற்றுண்டு இறுதிவரை மக்களிடையே சமயக் கல்வியையும் சமய உணர்வையும் ஆத்மிக ஈடுபாட்டையும் ஆலயங்களிலும் இல்லங்களிலும் புனித இடங்களிலும் வளர்த்த பெருமை புராண படனக் கல்விமுறைக்கே உரியதொன்றுகும். இம்முறை ஒருவகையில் வித்துவத்தின் பரீட்சைக் களமாகவும் அமைந்திருந்தது. நாட்டுக்குச் சிறந்த உரையாசிரியர்களையும் சித்தாந்த வித்தகர்களையும் தோற்றுவித்தது. மக்களிடையே செல்வாக்குப்பெற்ற புராணங்கள் மக்கள் மத்தியிற் பக்தி உணர்வையும் சித்தாந்த ஈடுபாட்டையும் பாரம்பரிய கலாசாரத் தாக்கத்தையும் வளர்த்துச்சென்றன. சமயக் கதைகள் பக்தி உணர்வையும் சமூக ஒருமைப்பாட்டையும் வளர்த்துச்செல்ல உதவின. காவிய ரசனைகள் இலக்கிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தின. சிறப்பாகப் புராண படன முறை, ஈழநாட்டின் கலாசாரம் கந்தபுராணக் கலாசாரத்தின் வழியது என்ற கூற்றினைப் பலரும் ஒப்புக்கொள்ளவைக்கும் அளவிற்கு உயர்நிலை பெற்று விளங்குகின்றது. நவீன பொதுசனத் தொடர்புச் சாதனங்கள், கல்வி வசதிகள், பொருளாதார மேம்பாடு, வாழ்க்கையின் அபிலாஷைகள் என்பன புராண படனச் செல்வாக்கினை வலுவிழக்கச்செய்ய முற்படுகின்ற பொழுதும் தொடர்ச்சியான பாரம்பரியக் கல்வி முறையின் தாக்கமும் சமய பக்தியும் ஆன்மிக உணர்வும் ஈழநாட்டிலே நிலைபெற்றிருக்கும்வரை சைவ சமயத்தின் வளர்ச்சிக் கருவிகளிலொன்றுன புராண படன முறை அழிந்து விடுமோ என்று அஞ்சுவதற்கில்லை. அது தன்பணியினை மெல்லமெல்ல ஆற்றிப் பக்தியின் வேகத்தை மக்கள் மத்தியில் ஊட்டவே செய்கின்றது; மேலுஞ் செய்துவருமென்பதிலும் எவ்வித ஐயமுமில்லை. ஈழநாட்டின் சைவ பாரம்பரியத்தின் சிறந்ததொரு முதுபெருஞ் சின்னமாகவும் பொக்கிஷமாகவும் இப்புராண படன முறையே இருந்து வருகின்றதென்றுல் அதை யாரும் மறுப்பதற்கில்லை. அவ்வகையில் சைவசமய இலக்கிய வரலாற்றிலே புராண படன முறை தனித்துவம்பெற்று விளங்குகின்றது எனலாம்.